

Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්

வெளியீடு :- 81 | மார்ச் - ஏப்ரல் 2017 | விலை ரூபா :- 10.00


## யாருக்கும் அஞ்சாது நடமாடுவதற்கு உத்தரவாதமும், உயிர் மற்றும் உடைமைகளுக்கு போதிய பாதுகாப்பும், சுயகௌரவமாக வாழுவதற்கான சமூக நீதி ஏற்பாடுகளும், அறிவியல் ஆற்றலும், பொருளாதார செழிப்பும் கொண்ட ஆளுமையான சமுதாயமாக தமிழ் மக்கள் முன்னேற வேண்டுமானால்

# ஏமாற்று தமிழ்த் தேசிய கதம்ப வேடதாரிகளை மக்கள் அரசியல் அரங்கிலிருந்து ஓரம் கட்ட வேண்டும்

### -அழைப்பு விடுக்கிறது தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி -



தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் திருநாவுக்கரசு. சிறீதரன் (தோழர் சுகு) அவர்கள் தமிழ் மக்களுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கிறார். தமிழர் தாயகம், தமிழர் தேசம், தமிழர் சுய நிர்ணயம், சமஷ்டி என அரசியற் திட்டம் எதுவுமின்றி வெற்றுக் கோசங்களை வெறுமனே தமது தேர்தல் வெற்றிகளுக்காக மட்டும் போட்டு, பிறகு அந்தத் தேர்தல்கள் முடிவடைந்ததன் பின்னர், மக்களையும் தமிழர் பிரதேசங்களின் முன்னேற்றங்களையும் மறந்து விட்டு, தமக்கு தனிப்பட்ட ரீதியில் அரசிடமிருந்து கிடைத்த சொகுசு வானகனங்களையும் சுகபோகங்களையும் பெறுவதில் மட்டுமே அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள் என்பது ஊரறிந்த உண்மை. இந்தப் போலித்தனமான தமிழ்த் தேசிய கதம்ப கூட்டமைப்பு- பேரவை அரசியல்வாதிகள் தாங்கள் இப்போது பதவி வகிக்கும் மாகாண சபைகளையும், முன்னர் நான்கு ஆண்டுகள் இவர்கள் அதிகாரம் பெற்றிறிருந்த உள்ளூராட்சி சபைகளையும் போலி அரசியல் நாடகங்களுக்கான அரங்கங்களாகவும், லஞ்ச ஊழல் மோசடிகளுக்கான களங்களாகவுமே ஆக்கியுள்ளனர். தமிழர்களின் ஒற்றுமை என இவர்கள் கூறுவதெல்லாம் வெறுமனே தேர்தல்களுக்காகவே.

( தொடர்ச்சி 11 ஆம் பக்கம் பார்க்க )

# யாழ்ப்பாண நிலக்கீழ் நீரை மாசுபடுத்தியோரை காப்பாற்றவே மாகாணசபை நிபுணர் குழுவை நியமித்தது

### குற்றம் சாட்டுகிறார். வடக்கு மாகாணசபை எதிர்க் கட்சித் தலைவர்



வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சினால் சுண்ணாகம் நிலக்கீழ் நீர் மாசு அடைந்தது தொடர்பாக 9 பேர் கொண்ட ஒரு நிபுணர் குழு 2015 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது தொடர்பாக வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ தவராஜா அவர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பியதோடு அந்த மாசு படுத்தல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட நொதோண் பவர் என்னும் நிறுவனத்தை காப்பாற்றவே மாகாண விவசாய அமைச்சர் நிபுணர்கள் குழுவை அமைத்தார் என கருத்து வெளியிட்டுள்ளார்.

இதே விவசாய அமைச்சர் 2014 ஆம் ஆண்டு டிசம்பரில் மாகாண

( தொடர்ச்சி 5 ம் பக்கம் )

# சர்வதேச ரீதியில் வியாபித்து நிற்கும் மக்கள் போராட்டத்தை அரசு மூடிமறைக்க முனைவது வருந்தத்தக்கது

### மு.சந்திரகுமார் - சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு



ஜெனீவாவில் அரசாங்கத்திற்கு கால நீடிப்பை வழங்குவதற்கு ஆதரவளித்த தமிழ்த் தலைவர்கள் மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார. கடந்த 14ந் திகதி கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுவரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட வேளையில் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில். காணாமால் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நீதி கேட்டு போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் காணமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த போராட்டத்தில் பங்கு கொண்டுள்ள மக்கள் இன்றைய நிலையில் பெரும் விரக்தியுற்றவர்களாக காணப்படுகின்றார்கள் என்றும் கடந்த 23 நாட்களாக இப் போராட்டம் தொடர்ந்த போதும் அரசாங்கம் அவர்களுக்கு எவ்வித

( தொடர்ச்சி 2 ம் பக்கம் )

## நாடும் நடப்பும்



ஒரு நாட்டின் பாராளுமன்றமே அந்த நாடு முழுமைக்குமான சட்டங்களை ஆக்குகின்ற மிக உயர்ந்த அமைப்பாகும். இலங்கையின் பாராளுமன்றத்தில் முன்னொரு காலகட்டத்தில் சட்ட அறிவு பெற்றவர்களும் சட்டத்துறையில் அனுபவம் பெற்றவர்களுமே பெரும்பாலும் இருந்தனர். இன்றைய இலங்கையின் பாராளுமன்றத்தில் 25 பேர் மட்டுமே பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்களாக உள்ளனர். 225 பேர் கொண்ட இலங்கை பாராளும்னறத்தில் 94 பேர் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கூட சித்தியடையாதவர்களே உள்ளனராம்.


# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM



sdptoffice@gmail.com
294 A, கண்டிவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 3210942, 021 222 2022

## ஒளிபடைத்த கண்களும் உறுதிகொண்ட நெஞ்சும் வேண்டும்

எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ்வுலகு. பகை கொண்ட உள்ளம். துயரத்தின் இல்லம், தீராத கோபம், யாருக்கு லாபம்.

சமூகங்களிடையே நல்லெண்ணங்களை வளர்த்தல் இன்று பிரம்ம பிரயத்தனமாகியிருக்கிது.

பகையிலும் வெறுப்பிலும் தான் இலங்கை சமூகங்களின் வாழ்வு அழிந்தது என்பது எளிமையான உண்மை.

பல பத்து ஆண்டுகள் அனுபவ பாடமாக கற்றிருந்தும் இந்த பகையுணர்வு தீர்ந்த பாடில்லை.

சாதாரண மனிதர்கள் மத்தியில் இந்தப் பகையுணர்வு இயல்பாக தன்பாட்டில் தோற்றம் பெறுவதில்லை.

விரல்விட்டு எண்ணக் கூடிய தீய சிந்தனை கொண்டவர்கள் இந்த வினோதங்களை தூண்டிவருகிறார்கள் இத்தீய சிந்தனை அவர்களின் தனிப்பட்ட நலன்கள் பேராசையிலிருந்து எழுகின்றது. பிரதானமாக அரசியல் அதிகார பொருளாதார நலன் என்று சொல்லலாம்.

வறுமையையும் பிணியையும் சாதாரண மக்கள் மேல் சுமத்திவிட்டு அவர்களிடையே பகையையும் விரோதத்தையும் தூண்டிவிட்டு இவர்கள் அதிகார- பொருளாதார லாபம் அடைகிறார்கள்

யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் கடந்துவிட்டன. சரி சமூகங்கள் சமத்துவமக வாழ ஒற்றுமையாக வாழ என்ன செய்யலாம் என்பதை சிந்திக்க எத்தனை பேர் இருக்கிறார்கள் .

பாதிக்கப்ட்ட மக்கள் மேலான போர்க்காயங்களை ஆற்றி அவர்கள் சுயமரியாதை கௌரவத்துடன் கண்ணியத்துடன் வாழ்வதற்கான- ஏற்பாடுகள், எவ்வளவு தூரம் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன?

அவர்கள் தங்கள் நிலங்களுக்காக மாதக் கணக்கில் அன்றாட அலுவர்களை விட்டுவிட்டுப் போராட வேண்டியிருக்கிறது.

போரினால் மத்திரமல்ல. தலைமுறை தலைமுறையாக நிலமற்ற வீடற்ற மக்கள் இருக்கிறார்கள்.

தமது கல்வித் தகைமைக்கேற்ப தொழிலொன்றை தருமாறு பட்டதாரிகள் போராடுகிறார்கள். இந்தப் பட்டதாரிகளின் போராட்டம் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலக ஒரு வழமை போலவே நிகழ்கிறது. இந்த அவலத்திற்கு முடிவு கட்ட வேண்டாமா?

இத்தகைய அவலங்கள் தொடராதிருப்பதற்கான கல்வி சீதிருத்தங்ள பல ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இன்றுவரை எதுவுமே இல்லை! எல்லாம் வழமை போலவே!

பொருத்தமான தொழிற் பயிற்சிநெறிகள் பரந்தளவில் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் .

தவிர பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பெண்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்

அவர்களுக்கான வழிகாட்டல் ஏற்பாடுகள் இருக்கின்றனவா?

ஏதோ அவ்வப்போது சமாளித்துவிட்டு தமது காரியங்களை பார்ப்பதாகத்தானே எமது அரசியல் அதிகார வர்க்கம் செயற்படுகிறது.

இனப்பெருமித பீற்றல்களுக்கு இங்கு குறைவில்லை. ஆனால், சாதாரண மக்களுக்கு வீடும் தொழிலும் அடிப்படையானவை.

இவற்றை உருவாக்குவதற்கு, விரிவாக்குவதற்கு நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், தொ்ழிற்துறை சார்ந்தவர்கள்; அரச நிறுவனங்கள் இணைந்து செயற்பட வேண்டாமா?

நிலமற்றவர்கள் வீடற்றவர்கள் இல்லை என்ற நிலையை நிறுவ வேண்டாமா?

அரச நிலம் என்றால் அது படையினருக்குத் தான் என்பது என்ன நியாயம் ?

யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் கடந்தும் அபகீர்த்தி வாய்ந்த பயங்கரவாத தடைச்சட்டம் நீடிப்பதற்கான நியாயங்கள் எதுவும் இருக்கின்றனவா?

அரசியல் யாப்பு சீர்திருத்த நடவடிக்கைகள் முடிவான பாதை தெரியாத விதமாக நீண்டு செல்வதும், தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அவநம்பிக்கைகள் தலைதூக்குவதும் நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதா?

இலங்கையின் பல்லின சமூகப் பாங்கு சமத்துவமாக, நீதியாக உறுதிப்படுத்தப்படுவதும் சகல சமூகங்களிடையேயும் நல்லெண்ணத்தை, நம்பிக்கையை கட்டியெழுப்புவதும் இணைந்து பயணிப்பதற்கான புதிய பாதையை திறப்பதும் உடனடி அவசியம்.

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
## Social Democratic Party of Tamils (S.D.P.T)

### அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற
கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 5 ஆம் பாகம் )

10. வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக :-

- வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட்டு ஒரே மாகாண ஆட்சி அலகாக அமைய வேண்டும் என்பது பெரும்பாலான வடக்கு - கிழக்கு தமிழர்களின் விருப்பமாக உள்ளது. அதேவேளை, இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண அமைப்பில் முஸ்லிம்களின் இனவாரியான சமூக நலன்களுக்கும், அவர்களின் பிரதிநிதித்துவங்களுக்கும் உரிய பங்கைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் 13ஆவது திருத்த அரசியல் யாப்பிலோ அதன் நிறுவன ரீதியான அமைப்புகளிலோ இருக்கவில்லை.
- அதனால், கிழக்கு மாகாணம் தனியானதைத் தொடர்ந்து பெருந் தொகையான முஸ்லிம்கள் மாகாண அதிகார அமைப்பில் தமக்குரிய பங்கு கிடைத்துவிட்டதாக திருப்தி கொள்வதைக் காணமுடிகிறது. இன்றிருக்கும் வகையாகவே கிழக்கு மாகாண ஆட்சி அமைப்பின் இருப்பும் செயன்முறைகளும் தொடருமேயானால், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருக்கும் உறவு மேலும் கசப்பானதாகவும் பகைமையானதாகவுமே வளரும். இந்தப் போக்கினால், மற்றொரு வகையில் வடக்கு வேறு, கிழக்கு வேறு என தமிழர்களின் தலைமைகள் பிளவுபடும் நிலைமை ஏற்படலாம். தமிழ், சிங்கள இன உறவில் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் மாறுபட்ட அணுகுமுறைகள் ஏற்படலாம். அது தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையிலான உறவை மேலும் மோசமாக்கவே வழிவகுக்கும்.
- கிழக்கில் வாழுகின்ற முஸ்லீம் மக்களிடையே பெரும்பான்மையான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ள தலைமைகளுடனான இணக்கப்பாடு இல்லாமல் தமிழர்கள் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண ஆட்சியமைப்பைப் பெற வேறு மாற்று வழி ஏதும் இல்லை என்பது யதார்த்தம். எனவே பெரும்பாலான தமிழர்களின் விருப்பம் நிறைவேறவும். அதே வேளை முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்கு திருப்தியான தீர்வு காணப்படவும் வேண்டுமாயின் தமிழ் அரசியல் தலைமைகள் முஸ்லீம் மக்களின் தலைவர்களுடனும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பிரதானமான கட்சிகளின் தலைவர்களுடனும் ஆக்கபூர்வமான முறைகளில் பேச்சுவார்த்தைகள் நடாத்தி யதார்த்தமான ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும். அதன் மூலமே, வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து இனங்களும் சமாதானமாகவும் சமத்துவமாகவும் சகோதரத்துவத்துடனும் வாழுவதற்கு வகையான அக நிலையான ஏற்பாடுகளோடு வடக்கு கிழக்கின் இணைந்த மாகாண ஆட்சி அமைப்பு உறுதிப்படுத்தப்பட முடியும்.

11. பெண்களின் சமூக அவலங்கள் மற்றும் அரசியல் பொருளாதார ரீதியாக அவர்கள் எதிர்நோக்கும் பாரபட்சங்கள் மற்றும் பாதுகாப்பின்மை தொடர்பாக:-

- வடக்கு - கிழக்கில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை பல்லாயிரம். இவர்களிற் பெரும்பாலானோர் குடும்பப் பொறுப்பை தனியாக சுமக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கான ஏற்பாடுகளிலேயே ஒரு நாட்டின் தேசிய சமூக வெற்றி தங்கியிருக்கிறது. எனவே, அவர்களுக்கான அனைத்து வகையான சமூக பாதுகாப்புகளும் வழங்கப்பட வேண்டும்.
- தமிழ்ச் சமூகத்தில் பெண் ஒடுக்குமுறை மற்றும் சாதி ரீதியான தீண்டாமை புரையோடிப் போயிருப்பதால் இங்கு வன்முறையாளர்கள் பெரும்பாலும் பெண்களை நோக்கியே இலக்கு வைக்கிறார்கள். இதனால் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள், அவலங்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். கீழைத் தேய நாடுகளின் குடும்பக் கட்டமைப்புகளும், அரசியல் சமூக நிறுவனங்களும், பொருளாதார அமைப்புகளும், வியாபார ஊடகங்களும் பெண்களையே பெரிதும் சுரண்டுகின்றன -ஒடுக்குகின்றன- இழிவுபடுத்துகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்கள சமூகத்தை விட தமிழ் சமூகத்திலேயே அதிக அளவில் பெண்கள் அவமானங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்; அடக்கப்படுகின்றனர்; பாரபட்சங்களுக்கு ஆளாகின்றனர். கடந்த முப்பது ஆண்டுகால உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள், இடம் பெயர்வுகள், அகதி வாழ்வு போன்றவை பெரிதும் தமிழ்ப் பெண்களையே பாதித்துள்ளன.
- பெண்களின் சுய பொருளாதார நிலையை அடைவதற்கு வேண்டிய முன்னேற்றங்கள் இன்னமும் ஏற்படவில்லை. எனவே, சட்ட ரீதியாக பெண்களுக்கான சமூக பாதுகாப்புகள் நடைமுறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், சட்டவாக்க மற்றும் நிர்வாக அமைப்புகளில் பெண்களின் பிரசன்னம் போதியளவு இருக்கும் வகையாக அரசியல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

### சர்வதேச ரீதியில் வியாபித்து நிற்கும் மக்கள் போராட்டத்தை ...

( 1 ம்.பக்கத் தொடர்ச்சி )

ஆறுதல் வார்த்தைகள் கூட தெரிவிக்காது மௌனம் காப்பது இம் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது எனவும், ஆனாலும் அவர்கள் மனவுறுதிப் படைத்தவர்களாகவே காணப்படுகின்றனர் எனவும், சரியான தீர்வு கிட்டும் வரை அவர்கள் சாகும்வரையான உண்ணா நிலைப் போராட்டத்தை மேற்கொள்ளவும் தயாராக உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், இன்று அனைத்து இடங்களிலும் மக்கள் நில மீட்பு போராட்டங்களிலும், காணமலாக்கப்பட்டோரின் உறவுகளை மீட்டுத் தரக்கோரியும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையை இழந்தவர்களாக மக்கள் தாமாகவே இப்போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், எனவே சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பும் மக்களோடு இணைந்து போராடத் தயாராக உள்ளதாகவும் கூறிய அவர், இதுபோன்று அனைத்து மக்கள் அமைப்புக்களும் எழுச்சி கொண்ட மக்களுக்கு பக்கபலமாக அணிதிரளவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவடைகிறது இந்த வருட ஜெனிவா கொண்டாட்டம் கலைகின்றன சர்வதேசம் மீதான தமிழர்களின் கனவுகள்

சர்வோதயன்

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகளும், இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் தொடர்புகளும் கருத்துக்களும், இலங்கையின் அரசியலில் கடந்த பல தசாப்தங்களாக மிகப்பிரதானமான இடத்தை பெற்றுள்ளன. 1977ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்தியா அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தொடர்பான பார்வைகளும் உறவுகளும் இலங்கையில் அதிகரித்தே வந்தன. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாகி புலிகளுக்கெதிரான யுத்தத்தை உக்கிரப்படுத்தியதோடு சீனாவின் முக்கியத்துவமும் இலங்கையில் அதிகரித்தது.

## புலிகளை உசுப்பேத்தி கொம்பு சீவியவர்களே வாக்கு வேட்டைக்கு கொப்பில் ஏற்றுகிறார்கள்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை தமிழ்க் கூட்டமைப்பு அரசியல் வாதிகள்,

> இந்தா சர்வதேசம் தயாராகிறது!
>
> ராஜபக்ஸ அரசின் யுத்த குற்றங்களுக்காக சர்வதேச விசாரணை நடக்கப் போகிறது!
>
> அவர்களை சர்வதேசம் குற்றக் கூண்டில் நிறுத்தப்போகிறது! காணாமற்போனவர்களை எல்லாம் சர்வதேசம் கண்டுபிடித்துத் தரப்போகிறது!
>
> வடக்கு கிழக்கை இணைத்து சமஸ்டி அரசியல் தீர்வை சர்வதேசம் வாங்கித் தரப்போகிறது!"

என்ற மாதிரி மேலைத் தேச நாடுகளின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கைகளை உச்சாணிக் கொப்பில் ஏற்றுகின்ற வகையாக வாக்குறுதிகளை வெளியிட்டார்கள்.

> அமெரிக்காவும் ஐரோப்பாவும் தங்களது ஆலோசனைகளின்படிதான் செயற்படுகின்றன என்றார்கள்!
>
> இந்திய அரசாங்கம் தங்களோடுதான் தோள் கொடுத்து நிற்கிறது என்றார்கள்!
>
> அமெரிக்கா தங்கள் நண்பன்!
>
> இந்தியா தங்கள் தோழன்!
>
> ஜெனிவாவில் தாங்கள் சொன்னபடிதான் எல்லாம் நடக்கும்!

இவ்வாறாக தொடர்ந்து அண்டப் புழுகு புலுடாக்களையும் 21 ஆம் புலிகேசி மாதிரி வீரப்பிரதாப அறிக்கைகளையும் வெளியிட்ட படியே ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளை அள்ளிக்கொண்டவர்கள் தான் இந்த தமிழ் கூட்டமைப்பினர்.

## வருடாந்த ஜெனிவா திருவிழா கனவுகளுடன் கலையாடும் தமிழர்கள்

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்தில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையானது உலகின் பல்வேறு பாகங்களிலும் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விவாதிப்பதற்கும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கும் ஜெனீவாவில் கூடுவது வழக்கம். 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மனித உரிமைகள் சபையின் இந்த மார்ச் மாதக் கூட்டம் வருடம் தோறும் ஜெனீவாவில் நடக்கும் ஒரு கோவில் திருவிழா போல ஆகிவிட்டது. அரசாங்க பிரதிநிதிகளும், இங்கிருக்கும் மனித உரிமைகள் நிறுவனங்களும், தமிழ்த் தேசவாத அரசியற் பிரமுகர்களும் இவ்வேளைகளில் ஜெனீவா போவதுவும் தவறாமல் நடந்து வருகிறது.

இந்த நாட்களில் தமிழ் மக்களுக்கு மேலைத் தேச நாடுகள் பற்றிய அதீத நம்பிக்கைகளை ஏற்படுத்தி - உசுப்பேத்தி கனவுகளில் மிதக்கவிடும் அறிக்கைகளை விடுவதும் வழமையான நிகழ்ச்சியாக உள்ளது. அது போதாதென்று வெளிநாடுகளில் உள்ள புலிக்கூட்டங்களும் ஜெனீவா நோக்கி யாத்திரை போவதுவும், ஜெனிவா நகர வீதிகளில் பிரபாகரன் கொடி பிடித்து காவடியாடுவதும் வழமையாகும். தமிழ் மக்களோ, இந்த ஏமாற்று வித்தைகளைப் பற்றிய எதுவித புரிதலுமில்லாமல், இந்த ஜெனிவா கூட்டத்தின் நாட்களில் இந்தப் பூமியில் சர்வதேசங்கள் எல்லாம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகவே சுழலுவது போல கனவு கண்டுகொண்டிருக்கின்றனர்.

## சர்வதேச அரசியல் உறவுகளுக்கு அவற்றின் நலன்களே மையம்

வருடம் தோறும் இலங்கையில் நடந்து முடிந்த யுத்த அழிவுகள் பற்றி விவாதங்களும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டாலும் சர்வதேச நாடுகள் இலங்கையில் எந்த விடயத்தையும் இலங்கை அரசின் ஒத்துழைப போடுதான் செய்வார்கள் என்பதனை தமிழ் மக்கள் இன்னமும் புரியவில்லை. தமிழர்கள் இலங்கை அரசை நோக்கி மிரட்டல் சவால்கள் விடுவதற்கு மேலைத் தேச நாடுகளோ இந்தியாவோ துணை நிற்க மாட்டா - அதனை விரும்பவும் மாட்டா. தமிழ்த் தேச புளுகு அரசியல் வாதிகளும், யாழ்ப்பாண மையம் கொண்ட தமிழ் நாளிதழ்களும் விடுகின்ற தமிழ் வசன சண்டித்தனங்கள் தமிழ் மக்களைக் குளிரூட்டுவதற்கு பயன்படலாம், ஆனால் அவை வவுனியாவுக்கு அப்பால் செல்லுபடியாகமாட்டா.

சர்வதேச நாடுகள் ஜெனீவா மாநாட்டை கூட்டி விவாதிப்பதுவும் தீர்மானிப்பதுவும் மனித உரிமைகள் பற்றிய விடயங்களின் ஊடாக ஏனைய நாடுகளில் தமது உறவுகளை பதிப்பிக்கின்றன. புதுப்பிக்கின்றன. என்பதே உண்மையாகும். இங்கிருக்கின்ற தமிழ்க் கூட்டமைப்போ அல்லது தமிழர் தேசம், சுயநிர்ணயம் என்று அடுக்கு வசனம் பேசுகின்ற கட்சிகளோ, குழுக்களோ சர்வதேச நாடுகளின் தீர்மானங்களில் ஓர் இஞ்சி அளவைக் கூட அசைக்க முடியாது. இந்த கூட்டமைப்புக்களும், கட்சிகளும், குழுக்களும் வெவ்வேறு வல்லரசு நாடுகளின் தேவைகளுக்கான தற்காலிக கருவிகளாக மட்டுமே பயன்பட முடியும் என்பதனை தமிழ் மக்கள் இன்னும் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.

## பல்வேறு நாடுகளின் வெவ்வேறு நிலைப்பாடுகளின் கூட்டமே ஜெனிவா மாநாடு

சர்வதேச நாடுகள் என்பது ஒரணியில் நிற்பவையோ அல்லது ஒரு முகமாகச் செயற்படுபவையோ அல்லது மற்றைய நாடுகளின் மக்களினுடைய நலன்களை முன்னுரிமையாகக் கொண்டவையோ அல்ல. தமிழர்களின் பெயரில் ஜெனீவா கூட்டங்களுக்கு செல்பவர்கள் எவரும் வேறு நாட்டவர் யாருக்காகவும் செல்வதில்லை. தத்தமது சின்னஞ்சிறு பிரபல ஆசைகளுக்காகவும் குட்டி குட்டி அரசியல் பொருளாதார நலன்களுக்காகவும் செல்கிறார்கள். அவ்வாறிருக்கையில் அங்கே வருகின்ற சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் நாடுகளின் நலன்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு ஏனைய நாடுகள், மக்கள் மீது கவனம் செலுத்துவார்கள் என நினைப்பது அறிவீனமாகும்.

## யதார்த்தங்கள் விருப்பங்களுக்கு அப்பாற்பட்டவை

தமிழ்க் கூட்டமைப்பின் முத் தலைவர்களான சம்பந்தரும் சுமந்திரனும் மாவை சேனாதிராஜாவும் இப்பொழுது புதிதாக நித்திரையால் முழித்தவர்கள் போல சர்வதேச யதார்த்தம் பேச தொடங்கியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் வாக்களித்தால் சர்வதேசம் தமக்குப் பின்னால் என்று தமிழர்களுக்கு உலகப் படம் காட்டி தேர்தல்களில் வெல்லுகிற பொழுது இருந்த உலக யதார்த்தம்தான் இன்றும் உள்ளது.

சர்வதேச யதார்த்தம் எவ்வாறு உள்ளது! சுர்வதேச உறவுகள் எவ்வாறு செயற்படுகின்றன! என்பவை ஒருபுறம் இருக்கட்டும். அவை ஒன்றும் புதிய கோட்பாட்டில் போன வருடம்தான் பயணிக்கத் தொடங்கியவை அல்ல. அது இந்த வருடம் இன்னொரு வகையாக மாற்றம் பெற்ற ஒன்றும் அல்ல. 2009ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இதே கூட்டமைப்பும் அவர்களின் கூட்டாளிகளும் பொய்யான உலகத்தை வாக்குகளுக்காக தமிழ் மக்களுக்கு காட்டினாா்கள் என்பதுதான் உண்மை.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தோடு இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாளிகளான இந்த தலைவர்கள் தங்களின் இன்றைய வசதிகளுக்காக மாற்றிப் பேச தொடங்கியிருக்கிறார்கள் என்பதே இவர்களின் சுயம் பற்றிய யதார்த்தம். இதே இவர்கள்தான் 2015ம் ஆண்டு வரை தமிழர்களுக்கு வேறு கதை விட்டவர்கள்.

இந்த சர்வதேசங்கள் யாருக்காக செயற்படுகின்றன? எதற்காக செயற்படுகின்றன? இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாக எதுவரை அவை செயற்படும்? என்கின்ற கேள்விகளுக்கான பதில்களாக அமைந்த யதார்த்தங்களை மற்றவர்கள் கூறிய போது இந்த கூட்டமைப்புக்காரர்கள் - இன்று மாறுபட்டு நிற்கும் தமிழ்த் தேசக்காரர்கள் உட்பட - அவ்வாறு கூறியவர்களை தமிழர்களுக்கு விரோதிகள் என்றார்கள், துரோகிகள் என்றார்கள். அப்பாவித் தமிழர்களும, ஏதோ சர்வதேசம் தமிழர்களுக்காகவே முண்டாசு கட்டிக் கொண்டு நின்றது போல, உண்மை நிலவரங்களைப் பேசியவர்களை எல்லாம் தவறாகவே அடையாளம் கண்டார்கள்.

அப்போது சர்வதேசம் பற்றிய கனவுலகக் கோட்பாடுகளை வெளியிட்டவர்கள் இப்போது தங்கள் வசதிக்காகவும் அரசாங்கத்துடன் கொண்டுள்ள கூட்டுக்காகவும் மாற்றிப் பேசுகிறார்கள். மற்றொரு கூட்டத்தினர் ராஜபக்சாக்களின் ஆட்சியை மீண்டும் கொண்டு வரும் நோக்குடன் தீவிர தமிழ்த் தேசவாத அரசியலைக் கிளப்புகிறார்கள்.

## உழுவது மட்டுமே வேலையானால் கிடங்குகள் மட்டுமே மிச்சமாகும்

தமிழர்கள் மத்தியில் இருந்து இன்று கிளப்பப்படும் பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச நாடுகள் இலங்கையில் எதையும் உருப்படியாக செய்யப்போவதில்லை என்பது தெளிவாகும். சர்வதேச நாடுகளைக்கொண்டு ஏதாவது ஒரு சில உருப்படியான விடயங்களை தமிழர்களின் முன்னேற்றத்துக்குரிய விதமாக செய்ய வைப்பதில் இந்த கூட்டமைப்புகாரர்களுக்கோ, அவர்களுக்கு மாற்று என புறப்பட்டுள்ள தமிழத் தேசக்காரர்களுக்கோ எந்தவித அக்கறையும் இல்லை

ஜெனீவா சர்வதேச நாடகம் இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்கு தொடரத்தான் போகிறது. இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுமானால் இதே கூட்டமைப்புக்காரர்களும் தமிழ்த் தேச நடிகர்களும் மீண்டும் மீண்டும் பழைய நாடகத்தையே அரங்கேற்றுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்போது யுதத்ம் முடிந்து 8 வருடங்கள் ஒடிவிட்ட நிலையில் சர்வதேச அரங்கங்களில் ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பது போல இலங்கை தமிழர் தொடர்பான விடயங்கள் நீர்த்துப் போய்க்கொண்டிருக்கின்றன. இப்பொழுதுதான் தமிழர்களில் ஒரு சிறு பகுதியினருக்கு சிறிது சிறிதாக உண்மைகள் புரியத் தொடங்கியிருக்கின்றன. அவர்களும் தெளிவாக உறுதியாக உண்மைகளை புரிந்திருக்கிறார்கள் என்று கூறமுடியாது.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில் ஆட்சியாளர்களோடு கூட்டு அரசியல் வியாபாரம் செய்வதற்கு கூட்டமைப்பினர் எவருக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இப்போது கூட்டமைப்பின் முத்தலைவர்களும் மைத்திரி - ரணில் ஆட்சியாளர்களோடு கூட்டு வியாபாரம் செய்வதற்கு புதிய வேடம் பூண்டிருக்கிறார்கள். இது எத்தனை நாளைக்கு என்பது இப்பவே கேள்விக்குறியாகிவிட்டது. மற்றையவர்கள் தமிழர் தேசம், சர்வதேச் புவிசார் அரசியல் என வேறு வகையான நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இப்போதுள்ள ஆட்சியில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டு ஆட்சியாளர்களோடு நல்ல கூட்டு வியாபாரம் செய்ய தமிழ்த்தேசக் காரர்களுக்கும் வாய்ப்பு கிடைத்தால் தமிழர் அரசியல் தலைகீழாக மாறிவிடும். எனவே இந்த அரசியற் கூட்டு களவாணிகளின் இரட்டை நாடகங்கள் பற்றியும், அதிதீவர வடிவம் கொண்ட போலிக் கோசங்கள் பற்றியும், பொய்த்தனமான வேசங்கள் பற்றியும் தமிழ் மக்கள் எப்போது தெளிவாக புரிந்துகொள்கிறார்களோ, உணர்ந்து கொள்கிறார்களோ அப்பொழுதுதான் தமிழர்களின் அரசியல் நிலவுகின்ற அகப்புற யதார்த்தங்களை புரிந்து கொண்டு உண்மையான பாதையில் நேர்மையாக நடைபோடும்.

அதுவரை, விதியே! விதியே! தமிழச் சாதியை என் செய நினைத்தாய் எனும் கேள்வி தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்காக போராடும் பட்டதாரிகள்

- மோகன் -




கடந்த காலங்களில் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வேலை கேட்டு பட்டதாரிகள் கவன ஈர்ப்பு போராட்டங்களையும், அடையாள உண்ணாவிரதங்களையும் பல தடவைகள் நடாத்தியிருக்கிறார்கள். இப் பத்தியை எழுதும் போது யாழ்ப்பாணத்தில் வேலை கிடைக்காத பட்டதாரிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் காரியாலயத்தின் முன் தொடர்ச்சியாக அமர்ந்திருந்து தமது வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வைக் கோரி போராடி வருகிறார்கள். மட்டக்களப்பு -அம்பாறையிலும் இதேபோன்று வேலைகிடைக்காத பட்டதாரிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### வலியறியா கேலிகளும் தர்க்கமில்லா கேள்விகளும்

இந்த பட்டதாரிகளின் கோரிக்கைக்கு அரசாங்கத்திடமிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. தமது பிரதிநிதிகளாக யார் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். யாரை அதிகாரத்திற்கு கொண்டுவர வேண்டும் என்று இந்தப் பட்டதாரிகள் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் செயற்பட்டார்களோ -யாரெல்லாம் இவர்களை உசுப்பேத்தி வேலைவாங்கினார்களோ அவர்களும் கூட இந்தப் பட்டதாரிகளின் போராட்டத்தைக் கண்டு கொள்ள வில்லை. இந்த பட்டதாரிகளின் போராட்டத்தை கேலிசெய்யும் விதத்திலேயே பலர் சமூக வலைத்தளங்களில் பதிவுகளைச் செய்கின்றனர். ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக சமூக வலைத் தளங்களில் எழுதியவர்கள் கூட கண்முன்னால் எதிர்காலம் குறித்த பெரும் கேள்வியோடு வீதிக்கு வந்திருக்கும் இளைஞர், யுவதிகளின் குரலுக்கு ஆதரவாக இல்லை.

"இந்த நாட்டின் அரசாங்கம் மக்களின் வரிப்பணத்தில் உங்களுக்கு இலவச கல்வியை வழங்கியிருக்கிறது", "உங்களை பட்டதாரிகளாக்கிய பின்னர் வேலை வாய்ப் பையும் அரசாங்கத்திடமே கோரலாமா?" எனக் கேள்வி எழுப்புகின்றனர். இந்தக் கேள்வி அரசுத் தலைவர்கள், அரச அதிகாரிகளிடமிருந்து மட்டுமல்ல, சமூக மட்டங்களிலிருந் தும் எழுகின்றன.

எமது நாட்டில் அதிகாரத்திற்கு வரும் அரசாங்கங்கள் மக்களின் வரிப்பணத்தை செலவிட்டு இந்த நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கி வரும் கல்வியானது அவர்கள் இந்த சமுதாயத்தில் கால் பதிப்பதற்கும், தமது வாழ்க்கைக்கு தேவையான வசதிகளை ஈட்டிக் கொள் வதற்கும் ஏற்றதாக உள்ளதா எனப் பார்த்தால், அப்படி இல்லை என்ற யதார்த்தத்தைத்தான் வேலையற்ற இளைஞர் பட்டாளம் எடுத்துக் காட்டுகிறது.

### காலத்தை கடத்துவதற்கு அல்ல கல்வி வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுப்பதற்கே!

அரசாங்க உத்தியோகத்தின் மூலம் ஒரு பிரஜைக்குக் கிடைக் கும் அனுகூலங்கள், பயன்கள், பாதுகாப்பு என்பன தனியார் துறையிலோ, இதர சுய தொழில் வாய்ப்புக்கள் மூலமோ கிடைக்காத போது ஒவ்வொருவரும் அரசாங்க உத்தியோ கத்தை கோருவதும் தேடுவதும் இயல்பானதாகும்.

இந்த நாட்டில் 14 இலட்சம் பேர் அரசாங்க உத்தியோகத் தர்களாக, ஊழியர்களாக உள்ளனர். இவர்களுக்கு இந்த நாடு கல்வியையும் வழங்கி, வேலை வாய்ப்பையும் வழங்கி, ஓய்வூதியத்தையும் வழங்குகிறது. அத்துடன் வாகனம் உட்பட இதர படிகள், வசதிகளையும் வழங்குகிறது. அவை யும் மக்களின் வரிப்பணத்திற் தான் நடக்கின்றன.

அனைத்து மக்களும் ஏதோ ஒரு வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசுக்கு வரி செலுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். வேலை செய்வதற்கு வயது வந்த அனை வருக்கும் வேலைவாய்ப்புக்களை உத்தரவாதம் செய்யும் பொறுப்பு அரசுக்கே உண்டு. வேலை தேடுவோர் தத்தமது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கான சூழ்நிலைகளை உத்தரவாதம் செய்ய வேண்டியதுவும் அரசாங்கத்தின் பொறுப்பே.

தேர்தற் பிரச்சார காலங்களில் "10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவோம்", "இளைஞர்களுக்கு உரிய வேலை வாய்ப்புகளை வழங்குவோம்", "வேலையற்றோர் என்ற நிலையை இல்லாது செய்வோம்", யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அத்தனை பேரும் சுய மரியாதையுடன் வாழ ஏற்பாடு செய்வோம்." என்று வாக்குறுதி அளிப்பவர்கள் பின்னர் அதிகாரத்துக்கு வந்ததுவும், "பட்டதாரிகள் வேலை வாய்ப்பை தாங்களே தேடிக்கொள்ள வேண்டும்" என்று கூறுவது எவ்வளவு அபத்தமானது.

மூன்று, நான்கு வருடங்கள் பல்கலைக் கழகங்களில் படித்து விட்டு இந்த நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் தமக்கான வேலைவாய்ப்பை கோருவது தவறா? அவர்கள் பெற்ற பட்டப் படிப்புகள் இலகுவாக வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு தகுதியற்றவை என்றால் அது படித்து பட்டம் பெற்ற இளை ஞர்களின் குற்றமா அல்லது அந்தப் பல்கலைக் கழகங்களை நடாத்தும் அரசின் குற்றமா?

குடிமக்கள் ஒவ்வொருவரதும் அடிப்படை தேவைகளான உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என்பவற்றை போலவே வேலைக்கான உத்தரவாதமும் அடிப்படை ஜீவாதார விடயமாகும். இன்றைய சர்வதேச நிய மங்களின்படி அது ஒரு அடிப்படை மனித உரிமையாகும். இவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசாங்க மொன்றின் பொறுப்பாகும். பட்டதாரிகளுக்கு மட்டுமல்ல இந்த




நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் வேலைக்கான உத்தரவாதத்தை வழங்குவது அரசாங்கத்தின் கடமை ஆகும்.

### ஏனைய நாடுகளிலுள்ள பொருளாதார நீதி ஏன் எமது நாட்டில் இல்லை

உலகை நாடுகள் எங்கும் தொழில் வாய்ப்பை தேடிச் செல்லும் நம்மவர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பின்றி இருக்கும் காலங்களில் அந்த நாடுகளின் அரசுகள் வழங்கும் உதவித் தொகை மூலமே தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கிறார்கள். அதில் ஒரு பகுதியை ஊரில், தம்மில் தங்கியிருக்கும் பெற்றோர், சகோதரர்கள் அல்லது மனைவி பிள்ளைகளுக்கும் அனுப்பிவைக்கிறார்கள்.

பிரான்சில் இவ்வாறு வேலைவாய்ப்பு கிடைக்காதிருக்கும் ஒருவருக்கு 1500 யுரோக்களை அந்த நாட்டு அரசாங்கம் வழங்குகிறது. வேலைவாய்ப்பொன்றை பெறுவதற்காக அரசாங்கம் அவருக்கு வழி காட்டுகிறது. அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி குறித்த வேலைக்குச் செல்வதற்கு ஒருவர் விருப்பப்படாது மறுத்தாலும் அவருக்கு 1400 யுரோக்கள் உதவி பணமாக தொடர்ந்தும் வழங்கப்படுகிறது. இவ்வாறு 2 வருடங்கள் வரை அரசாங்கம் வழங்கும் வேலைவாய்ப்புக்கள் அனைத்தையும் நிராகரிக்கும் ஒரு வருக்குக் கூட தொடர்ந்து 400 யுரோக்கள் உதவிப் பணமாக வழங்கப்படுகின்றது. தனது நாட்டு பிரஜைகளின் வாழும் உரிமையை பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் உத்தரவாதம் செய்வதைத் தானே இது காட்டுகிறது.

எனவே நாட்டு மக்களின் வரிப்பணத்தில் அரசாங்கம் உங்களுக்கு இலவச கல்வியை தந்திருக்கிறது. எனவே வேலை வாய்ப்பை அரசாங்கத்திடம் கோருவது முறையல்ல என்பதே தவறாகும். அரசியற் காரணங்களுக்காக எத்தனை ஆயிரம் வேலை வாய்ப்புக்களாயினும் தகுதி, திறமை எல்லா வற்றையும் கடாசி எறிந்து புறக்கணித்து விட்டு வேலை வழங்க முடிந்த அரசாங்க தலைவர்கள் அரசாங்க வேலை வாய்ப்புகளை வழங்குவதில் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்தால் என்ன?

புதியதொரு நாட்டை நிர்மாணிக்கப் போவதாக, தேர்தலின் போது வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த இந்த அரசாங்கம் எங்களது இளைஞர் யுவதிகள் எதிர் நோக்கும் வேலை இல்லாப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதே அதன் முதலாவது கடமையாகும். தமது இயலாமையை வெளிப் படுத்துபவர்கள் அதிகாரத்தில் இருந்து என்ன பயன். சாதிப்பதற்கே மக்களால் பதவிகள் வழங்கப்படுகின்றன.

பேசுவதற்கு மட்டுமல்ல ஜனநாயகம். சுயமரியாதையுடன் வாழுவதற்கான அளவுக்கு வருமானம் தரக்கூடிய வேலை களை தகுதிக்கு உரிய வகையில் பெறுவதுவும் ஜனநாயக உரிமையே!

# சர்வதேச மகளிர் தினம்





பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு மார்ச் 8 அன்று யாழ் பொது நூலக உணவக மண்டபத்தில் நடைபெற்றது வடக்கின் பல்வேறு மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் சமூக ஆர்வலர்கள், செயற் பாட்டாளர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் தலைவர் திருமதி ஞானசக்தி தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. குடும்ப சமூக வன்முறைகள், சமத்துவமின்மை, அரசியல் சமூக அரங்குகளில் பெண்களின் பாத்திரம் உள்ளிட்ட பல விட யங்கள் பேசப்பட்டன. ஆண் பெண் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கான தீர்வுகள் பற்றியும் உரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் பங்கு பற்றியவர்கள் பலரும் கலந்துரை யாடலில் பங்குகொண்டு ஆக்கபூர்வமாக கருத்துக்களை முன்வைத்தனர். உரிமைகளுக்காக பெண்கள் தினத்தில் மட்டுமல்ல அனைவரும் தொடர்ச்சியாக செயற்பட வேண்டிய தேவை உள்ளதெனவும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரிக்கும் அரசாங்க இலவச வைத்தியம் ஆதிக்கத்தில் தனியார் வைத்திய வியாபாரம்

கண்ணம்மா

சுதந்திரமடைந்த இலங்கையில் முதலிரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் பொது சமூக சேவைக் கட்டமைப்புகள் மிகச்சிறப்பாகவே செயற்பட்டன. சர்வதேச புள்ளிவிபரங்கள் - ஆய்வுகள் மற்றும் ஆசியாவில் பரவலாக நிலவிய எண்ணங்கள் என்பன தென்னாசிய மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலேயே கல்வி, சுகாதாரம் போன்ற பொதுச் சமூக சேவைகளை வழங்கும் விடயத்தில் இலங்கை சிறந்து விளங்கியதாக கருதப்பட்டது.

### பணக்காரர் தொடக்கம் வறியவர் வரை அன்றைக்கு இலவச அரச வைத்தியமே

1970 களின் பிற்பகுதி வரை பொதுமக்கள் அனைவருக்குமான மருத்துவ மற்றும் வைத்திய சேவைகளை பெருமளவில் வழங்கியது அரசாங்கப் பொது வைத்திய சாலைகளே. அன்றைய காலகட்டத்தில் தனியார் வைத்திய சாலைகள் குறிப்பிடத்தக்க அளவிற்குக்கூட வர்த்தகரீதியில் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களாக பரந்திருக்கவில்லை. கொழும்பு போன்ற நகரங்களில் ஓரிரு தனியார் வைத்திய சாலைகளே பிரபலமாக இருந்தன.

அன்றைய நிலையில் பரவலாக வைத்தியர்கள் தத்தமது வீடுகளை மையமாக கொண்டு அல்லது சிறு வைத்திய மையங்களை அமைத்தே வைத்திய சேவைகளை பணம் அறவிட்டு வழங்கி வந்தனர். மருந்து விற்பனை நிலையங்கள் கூட அன்றைய காலத்தில் முக்கியத்துவம் பெற்றவைகளாக இருக்கவில்லை. தனியார் மருந்துக் கடைகளில் மிகச் சில எண்ணிக்கையான மருந்து வகைகளே வர்த்தகத்தில் இருந்தன. மாறாக, அரச பொது வைத்தியசாலைகளை நாடும் நோயாளர்களுக்கு அனைத்து வகைப்பட்ட மருந்துவகைகளும், வைத்தியத்திற்கு தேவையான துணைப்பொருட்களும் வைத்தியசாலைகளாலேயே வழங்கப்பட்டன. அன்றைய கால கட்டத்தில் அரச வைத்திய சாலைகளின் வைத்தியர்களே பெரும் நம்பிக்கைக்குரியவர்களாகவும் புகழ்படைத்தவர்களாகவும் இருந்தனர் பெரும்பாலான மருத்துவ வைத்தியமும், மருத்துவ பரிசோதனைகளும், சத்திர சிகிச்சைகளும் அரச பொது வைத்திய சாலைகளிலேயே நடைபெற்றன. அவசர சிகிச்சைகளுக்கான அனைத்து வசதி வாய்ப்புக்களும் அரச பொது வைத்தியசாலைகளிலேயே இருந்தன.

### திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தில் வைத்தியம் வர்த்தகமாக வளர்ந்துள்ளது

1977 இல் இலங்கையின் பொருளாதாரம் திறந்து விடப்பட்டதோடுதான் வைத்தியம் என்பது தனியார் வியாபாரமாக இலங்கையில் விரிவடையத் தொடங்கியது. படிப்படியாக அனைத்து வசதிகளும் - நவீன தொழில் நுட்பங்களும் கொண்டவையாக தனியார் வைத்திய நிறுவனங்கள் பெரும் வர்த்தக நிறுவனங்களாக உருவெடுத்தன. பொது வைத்திய



அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் ஊசி போட காத்திருக்கும் நோயாளிகள்

சாலைகளில் வறிய மற்றும் சாதாரண கீழ்நிலையில் உள்ள மக்கள் மட்டுமே வைத்திய பரிசோதனைகளுக்காகவும், மருந்துகளுக்காகவும், சத்திர சிகிச்சைகளுக்காகவும் செல்வார்கள்: நன்கு அவதானிக்கப்படும் தரமான, விரைவான வைத்திய சேவையை, வசதியான சூழ்நிலைகளோடும், முறையான பராமரிப்புகளோடும் பெறவேண்டுமானால் தனியார் வைத்திய நிலையங்களையே நாட வேண்டும் எனும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைக்கும் அரசாங்கத்தால் நடாத்தப்படும் பொது வைத்திய சாலைகளை நம்பியே பெருந்தொகையான மக்கள் செல்கின்றனர். காரணம் தனியார் வைத்திய நிறுவனங்களை நாடும் அளவுக்கு சாதாரண மக்களிடம் பணம் இல்லை. அரச பொது வைத்தியசாலைகளில் தேவையான அளவுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுக்கோ அல்லது மருந்துகளின் கிடைப்பனவுக்கோ குறைவிருப்பதாகத் தெரியவில்லை ஆனால் அதன் நன்மைகள் பொது மக்களுக்கு போதிய அளவு கிடைக்காத ஒரு மர்ம நிலைமை பராமரிக்கப்படுகிறது.

பொது வைத்தியசாலைகளில் நோய்களை பரிசோதிக்கும் வைத்தியர்கள் தனியார் மருந்து கடைகளில் விற்கும் மருந்துகளையே சிபார்சு செய்கின்றனர். அந்த அளவிற்கு மருந்து வியாபார நிறுவனங்களின் செல்வாக்கு அரச வைத்தியசாலைகளில் நிலவுகின்றது.

பொது வைத்தியசாலைகளில் மருத்துவ பரிசோதனைகளை பெறுவதற்கு பொதுமக்கள் பல மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்கின்ற சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது. உடனடியாக அந்த பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்கான அறிக்கைகளை பெற வேண்டுமானால் தனியார் வைத்திய நிறுவனங்களையே நாடவேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் உள்ளாக்கப்படுகின்றனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் இலவசமாகப் பெறக்கூடிய மருத்துவ பரிசோதனைகளை தனியார் நிலையங்களில் பெறுவதற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழிக்க வேண்டிய கட்டாயத்திற்கு பொதுமக்களை வைத்தியர்கள் மிக நாசூக்காக தள்ளிவிடுகின்றனர். அதே போலவே அவசரமாக பெறவேண்டிய சத்திர சிகிச்சைகளையும் பொது வைத்திய சாலைகளில் உடனடியாகவோ குறுகிய காலத்திலோ பெறமுடியாத நிலைமை ஏற்படுகிறது ஆனால் அதே சத்திர சிகிச்சையை இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்தால் தனியார் வைத்திய நிறுவனங்களில் உடனடியாக அல்லது மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் பெறமுடிகின்றது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், பொது வைத்தியசாலைகளில் பணி புரிகின்ற அதே வைத்தியர்கள்தான் தனியார் நிறுவனங்களிலும் தமது வைத்திய சேவைகளை வியாபாரம் செய்கின்றனர்.

### இலவச மருத்துவத்துக்கு 20 ஆயிரம் கோடி தனியார் மருத்துவ வியாபாரமும் 20 ஆயிரம் கோடி

இலங்கையில் மருந்துகளுக்கும் மற்றும் வைத்திய சேவைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற மொத்த செலவினமானது. - மொாத்த தேசிய வருமானத்தில் சுமார் மூன்றரை சதவீதமாகும். அரசாங்கமும் மக்களும் மருந்துகளுக்காகவும், வைத்திய சேவைகளுக்காகவும் செலவழிக்கின்ற தொகை எறத்தாழ நாற்பது ஆயிரம் கோடி ரூபாய்களாகும். இதில் 20 ஆயிரம் கோடி ரூபாய்கள் அரசாங்கத்தினால் செலவிடப்படுகின்றது. தனியார் மருந்துக் கடைகளில் மருந்துகள் வாங்குவதற்காக பொதுமக்கள் சுமார் பத்தாயிரம் கோடி ரூபா செலவு செய்கிறார்கள் அதே வேளை தனியார் வைத்திய நிலையங்களில் வைத்திய சேவைகளை பெறுவதற்காக இலங்கை மக்கள் மற்றுமொரு பத்தாயிரம் கோடி ரூபாவை செலவிடுகிறார்கள். வைத்திய சாலைகளில் வைத்து வைத்தியம் செய்யப்படுகின்ற நோயாளர்களில் 85 வீதத்திற்கு மேற்பட்டோர் அரசாங்க பொது வைத்தியசாலையிலேயே வைத்தியம் பெறுகின்றனர். அரசாங்கம் மொத்த மருத்துவ மற்றும் வைத்திய செலவினங்களில 50 சதவீதத்திற்கும் மேல் பொதமக்களின் வரிப்பணத்திலிருந்து செலவிடப்படுகின்ற போதிலும் பொதுமக்களிடமிருந்து சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாவை தனியார் வைத்திய சாலைகளும் மருந்துக் கடைகளும் ஒரு வருடத்திற்குள் ஏப்பம் விட்டு விடுகிறார்கள்.

இந்த நிலை படிப்படியாக தொடருமானால், அரசாங்க பொது வைத்தியசாலை என்பது வறியவர்களுக்கும் மிகக் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கும் அநாதரவானவர்களுக்கும் மட்டுமே என விரைவில் ஆகிவிடும். ஓரளவிற்காயினும் திருப்திகரமான வைத்திய சேவையை பெறவேண்டுமானால் தனியார் வைத்தியசாலைகளுக்கு பணத்தை அள்ளிக் கொட்டி செலவழித்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தை நோக்கி பொது மக்கள் படிப்படியாக தள்ளப்படுகின்றமை அதிகரித்து வருவதை அவதானிக்கலாம். அரச பொது வைத்தியசாலைகளை பின்தங்கிய நிலையில் வைத்திருப்பதிலும், அரச பொது வைத்தியசாலைகளில் வைத்திய சேவைகளை தரக்குறைவானதாக ஆக்குவதிலும் தனியார் மருந்து உற்பத்தி நிறுவனங்களும், தனியார் வைத்திய வியாபார நிறுவனங்களும் பெரும் பாங்காற்றி வருகின்றமை உலகறிந்த உண்மையாகும். இது இலங்கையிலும் படிப்படியாக விரிவடைந்து வருகின்றமை கண்கூடு.

## யாழ்ப்பாண நிலக்கீழ் நீரை மாசுபடுத்தியோரை காப்பாற்றவே ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

சபையில் பேசும் போது "சுண்ணாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் மனித ஆரோக்கியத்திற்கும் விவசாயத்திற்கும் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில் எண்ணை கலந்துள்ளமைக்கு சுண்ணாகம் அனல் மின் நிலைய வளாகத்தில் இருந்து வெளியேறிய கழிவு டீசலே காரணம் என்பது வெள்ளிடைமலை" எனக்குறிப்பிட்டதாகவும் கௌரவ தவராசா சுட்டுக்காட்டினார்

அவ்வாறு தெளிவாகத் தெரிவித்த விவசாய அமைச்சரே பின்னர் தனது விருப்பப்படி ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்து சுண்ணாகம் நிலத்தடி நீரில் டீசல் எண்ணெய்க் கழிவு கலந்ததாக இல்லை என முடிவுகள் வெளியிடப்பட காரணமாக இருந்ததையும் கௌரவ தவராஜா அவர்கள் கடுமையாக சாடியுள்ளார்

வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் நிபுணர் குழுவானது நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் யாழ்ப்பாண குடிநீரில் கலந்துள்ள கழிவுகள் பற்றி எந்த விதமான தொடர்புகளையும் மேற்கொள்ளவில்லை எனவும்ஈ அது தொடர்பான அச்சபையின் ஆவணங்களிலோ, சுண்ணாகம் நிலக்கீழ் நீர் தொடர்பான அச்சபையின் கடந்தகால அறிக்கைகளிலோ கவனம் செலுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார். விவசாய அமைச்சரின் நிபுணர் குழுவானது முறையாக, நேரடியாக முறையான ஆய்வுகளை மேற்கொள்ளாமல் அவுஸ்ரேலியாவில் இருந்து பெற்று வந்து ஆய்வு செய்த அறிக்கைகளிலும், வேறு முறையற்ற ஆய்வுகளின் முடிவுகளையும் சார்பாக பயன்படுத்தியுள்ளமையை திரு. தவராசா வெளிப்படுத்தியுள்ளார்

ஐக்கிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் யாழ் மாவட்ட குடிதண்ணீரில் மாசு கலந்துள்ளமை தொடர்பாக பின்வருமாறு கூறியுள்ளார்,

"பிரித்தானிய உயர் ஆணையாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வேளையில் நீர் மாசு அடைந்திருப்பது பற்றி வடக்கு மாகாண முதலமைச்சரிடம் வினவிய போது, அதற்கு முதல் அமைச்சர் முன்னர் அவ்வாறான பிரச்சினை இருந்ததாகவும் பின்னர் நீர் மாதிரிகளை வெளிநாட்டுக்கு எடுத்து சென்று பரிசோதித்ததாகவும் தற்போது அவ்வாறு இல்லை எனவும் உறுதியளித்துள்ளார்."

இதனை சுட்டிக்காட்டிய திரு. தவராசா அவர்கள், வெளிநாடுகளுக்கு நீர் மாதிரிகளை எடுத்துச் சென்று பரிசோதித்தவரகள் யார் என்றும் அவ்வாறு பரிசோதிக்க அனுமதியளித்தவர்கள் யார் எனவும் கேள்வி எழுப்பி அதற்கான பதிலை முதலமைச்சர் தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்

இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது சுண்ணாக குடிநீர் பற்றிய பரிசோதனைக்காக வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் நிபுணர் குழு ஒன்று அமைத்த முறையும், அந்த நிபுணர் குழு செயல்பட்ட விதங்களையும் பார்க்கையில, இவையெல்லாம் சுண்ணாகம் குடிநீரில் கழிவுகள் கலப்பதற்குக் காரணமாக இருந்ததாகக் குற்றச்சாட்டப்பட்ட நிறுவனமான நொதேர்ண் பவர் நிறுவனத்தை காப்பாற்றுவதற்காகவே மேற்கொள்ளப்பட்டவை என கவனிக்கத் தோன்றவதாக திரு தவராசா அவர்கள் வடக்கு மாகாணசபையில் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டின் அரசியல் – ஒரு பறவைப் பார்வை

## அபிமன்யு பதில்கள்

*சி. சுந்தரலிங்கம்* *திருகோணமலை*

எழுப்பப்பட்ட கேள்வி:

**தமிழ் நாட்டின் அரசியல் எவ்வாறு இருக்கின்றது, உங்கள் கருத்து என்ன?**

சொல்லப்பட்ட பதில்:

சமீபமாக, ஒரு சில மாதங்களிலேயே துரிதமாக பல நிகழ்வுகள் நடந்தேறி விட்டன:-

- சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 72 நாட்கள் அங்கு சிகிச்சையளிக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு, ஏன் அனுமதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது? எந்த நிலைமையில் அனுமதிக்கப்பட்டார்? அந்த 72 நாட்களும் என்ன நடந்தது? எப்பொழுது, எப்படி மரணம் ஏற்பட்டது? என்று அவரது மரணத்தில் மர்மமும், குழறுபடிகளும், பல விடயங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகளும் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் எழுகின்றன.
- தன்னை எவருமே என்றுமே அசைக்கமுடியாது என்ற எண்ணத்துடன் கோலோச்சிய - 'குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்த' - அந்த முதலமைச்சர் ஜெயலலிதா படிப்படியாக மறக்கப்பட்டு, இப்பொழுது அவரது பெயர் தத்தம் ஏமாற்று அரசியலுக்கு வேண்டிய வகையாக அதிமுக காரர்களால் அவ்வப்போது உச்சரிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது.
- 'துக்ளக்' பத்திரிகையின் ஆசிரியராகவும், ஜெயலலிதாவுக்கு நெருக்கமானவராகவும், கோமாளி அரசியலின் உள்ளடக்கங்களை நவரசங்களுடனும் வெளிக்கொணர்ந்த அறிவாளியாகவும், நகைச்சுவை நடிகனாவும், பத்திரிகையாளனாகவும் வாழ்ந்த சோ மறைந்து விட்டார்.
- தமிழ் இலக்கிய படைப்பாளியாகவும், அலங்கார அடுக்கு மொழித் தமிழை மேடைப் பேச்சுக்குள்ளும் சினிமாவுக்குள்ளும் கொண்டு வந்த வசன கர்த்தாவாகவும், கவிஞனாகவும், நான்கு முறை தமிழக முதலைமைச்சராகவும், தமிழக ஆட்சியில் லஞ்சங்கள், ஊழல்கள், அதிகார துஷ்பிரயோக மோசடிகள் ஆகியவற்றை பெருக்கெடுத்தோட வைத்தவரும், தமிழகத்தில் குடும்ப ஆதிக்கத்தை நிலைநாட்டிய பெருமைக்குரியவரும், என்னதான் இருந்தாலும் அவரை மறைத்து தமிழக அரசியலின் எந்தப் பக்கத்தையும் எழுத முடியாது என ஒரு வரலாற்றை ஆக்கியவரும், 90 வயது கடந்தும் அரசியலில் ஆளுமையுடன் வாழ்ந்தவருமான கலைஞர் கருணைநிதி அவர்கள், தன் மகன் ஸ்ராலினை திமுகவுக்கு தலைவராக்கிவிட்டு இப்போது நிமிர்ந்திருக்க முடியாதவராக உடல் நலிவுற்று, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாத அளவுக்கு ஞாபகமறதி கொண்டவராக, இறுதி யாத்திரைக்குக் காத்திருக்கிறார்.
- நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் வாயிலான தகவல் பரிமாற்றங்கள் மூலம் சில ஆண்டுகளுக்கு முன்னர் சில அரபு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது போல், எந்த அரசியல் கட்சித் தலைமைகளினதும் வழிநடாத்தல்கள் இல்லாது, மெரீனா கடற்கரையில் மட்டுமல்ல, ஏறத்தாழ தமிழகம் முழுவதும் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஜல்லிக்கட்டுப் போராட்டம் இன்னமும் தமிழகத்தின் அரசியல் வாதிகளை - அதிகார வர்க்கத்தை கதி கலக்கிக் கொண்டிருக்கிறது
- இவ் வகையான போராட்டங்கள் வெற்றிகரமாக முடிவுற்று இலக்குகள் எய்தப்பட்டால், மக்களின் மீதான அதிகார வர்க்கத்தின் பிடிகள் தளர்ந்து போய்விடும் என்ற அச்சத்தால், அந்த வர்க்கத்திற்கு முண்டு கொடுக்கும் தமிழ்நாட்டு பொலிசார் இளைஞர்கள் மீதும், அவர்களுக்கு ஆதரவளித்த மெரீனா கடற்கரைக்கு அருகாமைகளில் வசிக்கும் அடித்தள மீனவ மக்கள் மீதும் அவிழ்த்து விட்ட கோரத் தாண்டவம் மீதான கோபக் கனல் இன்னமும் தமிழகத்தில் தணியாமலே உள்ளது.
- ஜெயலதாவின் மறைவிற்குப் பின்னர், அவரைப் புதைத்த இடத்தில் மண் காயும் முன்னரே அதிமுக பிரமுகர்களுக்குள் தொடங்கிய அரசியல் மல்லுக்கட்டு மேலும் மேலும் விரிவடைந்து பரவிக் கொண்டிருக்கிறது.









- ஜெயலலிதாவின் தோழியாக வலம் வந்த சசிகலா 'சின்னம்மா' வாக அவதாரமெடுத்து முதலமைச்சர் ஆசை கொண்டு அதற்கு அடித்தளமாக முதலில் அதிமுக பொதுச் செயலாளராக உருவெடுத்த வேளையில் இந்திய நீதிமன்றம் அவரை சிறைக்குள் போட்டு ஜம்பரும் மாட்டிவிட்டது. இன்னும் பத்து ஆண்டுகள் அவரின் தலைமையிலான அதிமுக தமிழக மக்களில் பெரும்பான்மையானவர்களின் கட்சியாக உயிர் வாழ்ந்தால் மட்டுமே அவரின் முதலமைச்சர் கனவு நனவாகலாம்.
- ஜெயலலிதா முன் கூனிக் குழைந்தவர்கள், காலில் விழுந்தவர்கள், ஜெயலலிதாவின் பின்னர் சசிகலாவின் முன்னும் அதே பாரம்பரிய மரபைத் தவறாமற் கடைப்பிடித்தார்கள். இப்பொழுது சசிகலாவின் அதிமுக சுவரொட்டிகளிலும், பதாகைகளிலும் 'அம்மா' ஜெயலலிதா சின்னதாகப் போய் விட்டா, "சின்னம்மா" சசிகலா பெரிசாகி விட்டா. ஜெயலலிதாவினால் விலக்கி வைக்கப்பட்ட சசிகலா குடும்பத்தவர்கள் அதிமுகவின் முக்கியஸ்தர்களாகி விட்டனர்.
- சசிகலாவிற்கு வழி விட முதலைமைச்சர் பதவியைத் துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட பன்னீர்செல்வத்தின் கூன் முதுகு எப்படி திடீரென நிமிர்ந்தது? நிமிர்த்தியது மோடியா அல்லது ஸ்ராலினா என்ற கேள்விகளுடன் தமிழக மக்கள் உள்ளனர்.
- ஜெயலலிதா இறக்கும் வரை யாருமே அறிந்திராத ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா, அந்த ஒரு கராணத்திற்காகவே ஜெயலலிதாவின் அரசியல் வாரிசாக, தமிழக மக்களுக்குத் தலைமை தாங்க முன்வந்திருப்பதாகப் புறப்பட்டிருக்கிறார். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மகாராஜா அல்லது மகாராணி போன்ற மமதையுடன் செயற்படலாம். மக்களாட்சி அமைப்பில் ஆளுபவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் என்ற ஒரே காரணத்துக்காக ராஜ வாரிசுகளாக முடியாது.
- பல கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து சட்டசபை உறுப்பினர்களானவர்கள், சட்டசபை கலைக்கப்பட்டு மறுதேர்தல் என்று வந்தால், மறுபடியும் தேர்தலில் வெற்றி பெறுவது நிச்சயமில்லை என்பதால், எப்படியாவது இன்னமும் இருக்கும் மிகுதி நான்கு வருடங்களிலும் போட்ட பணத்தைப் பல மடங்காகப் பெருக்குவதற்கு சட்டசபை கலையாதிருக்க வேண்டும் என்பதே அதிமுக அமைச்சர்களினதும், உறுப்பினர்களதும் அங்கலாய்ப்பு.
- ஓமந்தூராரும், ராஜாஜியும், காமராஜரும், பக்தவத்சலமும், அண்ணாவும் அமர்ந்த முதலமைச்சர் கதிரை இப்போது தேனீர்க் கடை கல்லாப் பெட்டிக் காரன் கதிரையாக ஆக்கப்பட்டு விட்டது.

*நி. கண்ணன்* *கொழும்பு*

எழுப்பப்பட்ட கேள்வி:

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சொல்லப்பட்ட பதில்:

அந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் மீதான வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருக்கிறது. நேர்மையாகவும், நியாயமாகவும், நீதியாகவும் அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு, உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

முன்னொரு காலகட்டத்திலும், துப்பாக்கி தூக்கப்பட்டு, பின்னர் திசை திருப்பப்பட்டு, அது எம்மை மிகவும் மோசமான நிலைமைகளுக்கு இட்டுச் சென்றது எமது சமீப காலத்தின் வரலாறு. ஆதன் விளைவான சோகங்களை நாம் இப்பொழுதும் பார்க்கின்றோம் - அனுபவிக்கின்றோம். எத்தனையெத்தனை இழந்த உயிர்கள், அழிந்த உடமைகள், ஈடு செய்ய முடியாத பேரிழப்புகள்!.


ஒரு கவிஞனின் வரிகளை இங்கு பதிப்பது பயனுடையதாகும் என கருதுகிறேன். இந்தக் கவிதையை எழுதிய பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்களின் அரசியல் கருத்துக்களோடு எனக்கு உடன்பாடு கிடையாது. ஆனால் அவரது இக்கவிதை என் நினைவிற்கு வருகிறது.

துரோகி எனத் தீர்த்து
முன்னொரு நாள் சுட்ட வெடி
சுட்டவனைச் சுட்டது.
சுடக் கண்டவனைச் சுட்டது.
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது.
குற்றம் சாட்டியவனை
வழக்குரைத்தவனை
சாட்சி சொன்னவனை
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது.
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது.
சும்மா இருந்தவனையும்
சுட்டது

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு
உங்கள் கேள்விகளையும் தரப்படும் பதில்கள் தொடர்பான
உங்கள் அபிப்பிராயங்களையும் அனுப்ப வேண்டிய முகவரி:

அபிமன்யு பதில்கள்
கண்ணோட்டம்
இல: 294 A. கண்டி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் குமார்
தம்பிலுவில்

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

தமிழ் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் மார்ச், ஏப்ரல் மாதத்தில் உயிர்நீத்தவர்களில் நாம் சேகரித்துள்ள படங்கள் இவை.
மக்களின் விடிவிற்காக உயிர் ஈந்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் முன்னெடுத்துச் சென்ற மக்களின் சுபிட்சமான எதிர்காலத்திற்காக உழைப்போம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் சிவா
பெரியகல்லாறு



தோழர் நிதி
அக்கரைப்பற்று



தோழர் நவீனன்
அக்கரைப்பற்று



தோழர் ஜெயந்தன்
பெரியநீலாவணை



தோழர் கீர்த்தி
பெரியகல்லாறு



தோழர் மனோகரன்
குருமண்வெளி



தோழர் ரங்கன்
செட்டிபாளையம்



தோழர் கெனடி
வீரச்சோலை



தோழர் விஜயன்
வீச்சுக்கல்முனை



தோழர் சுரேஸ்
கல்வியங்காடு



தோழர் சுந்தரம்
பேத்தாளை



தோழர் அசோக்
தம்பிலுவில்



தோழர் அன்ரன்
மண்டூர்



தோழர் நிமலன்
பெரியகல்லாறு




தோழர் காதர்
வலையிறவு



தோழர் வேவி
குருமண்வெளி



தோழர் பிரதீப்
ஏறாவூர்




## கந்தன் கருணை படுகொலை 30 மார்ச் 1987

யாழ் மண்ணில் புலிகள் நிகழ்த்திக் காட்டிய சிறைப்படுகொலை இதுவாகும். இதன் போது எமது தோழர்கள், மாற்று இயக்கப் போராளிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 60 பேர் வரை கொல்லப்பட்டதாக இக் கோரச் சம்பவத்தில் உயிர் பிழைத்த தோழர்கள் தெரிவித்துள்ளனர். வெலிக்கடை படுகொலையை ஒத்த இவ்வெறிச்செயலால் உயிரிழந்த எமது தோழர்களில் சிலர்.



பென்சமின் மலையகம் | கதிர் கிளிநொச்சி | ஈஸ்வரன் யாழ்ப்பாணம் | மஜித் கந்தர்மடம் | செல்வன் மயிலிட்டி | தாசன் மயிலிட்டி | அன்பரசன் மலையகம் | பாவலன் முருங்கன்



தோழர் குமார்
குருநகர்
18.03.1985



தோழர் மதன்லால்
திருகோணமலை
19.03.1989



தோழர் அருள்
மண்டூர்
04.03.1987



தோழர் ஐயா
கண்ணாட்டி



சாரங்கன்
முருங்கன்



தங்கேஸ்
நானாட்டான்

இவர்களுடன் தோழர்கள் ரவி, சில்வா, பவா ஆகியோரும் 06.04.1988 அன்று சகோதரப் படுகொலைக்கு பலியாயினர்



தோழர் இந்திரன்
சாவகச்சேரி
15.04.2011



தோழர் அண்ணாமலை
கொடிகாமம்
03.04.1989



தோழர் பீற்றர்
திருகோணமலை
05.04.1985



தோழர் ரஞ்சித்
[illegible]



சந்திரன்
பலாலி



கந்தசாமி
திருகோணமலை



கடாபி
பலாலி



ஜெராட்
ஊறணி

இவர்களுடன் தோழர் தாஸ் அவர்களும் 03.04.1986 கடற்படை தாக்குதலில் பலியானார்.



கடாபி
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அன்பார்ந்த வாசகர்களே.**

**இக்கடிதம் எழுதுகையில் இலங்கைப் பிரச்சனை குறித்து ஜெனீவா மனித உரிமைச் சபையில் விவாதங்கள் ஆரம்பித்துள்ளன.**

போர்க் குற்ற விசாரணை, காணாமல் போனோர் பற்றிய விபரங்களைத் திரட்டுதல், இடைக்கால நீதி வழங்குதல், விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை இணைத்தல், இதே பிரச்சனைகள் மீளவும் எழாது தடுத்தல் என 25 அம்சங்களை உள்ளடக்கிய தீர்மானத்தை அச் சபையில் இலங்கை 2015ம் ஆண்டு தானே முன்மொழிந்து நிறைவேற்றியது. தனது 5வருட ஆட்சிக் காலத்தில் இரண்டு

# ஐ நா மனித உரிமை மாநாடு




# தடுமாறும் தமிழ் அரசியல் தலைமை

ஆண்டுகளை முடித்திருக்கும் இலங்கை அரசு தான் கொடுத்த வாக்குறுதிகள் சிலவற்றைப் பாதி நிறைவேற்றியிருக்கிறது. அரசை சுமுகமாக நடத்திச் செல்வதற்கு இப்போதுள்ள உள்நாட்டு அரசியல் சாதகமாக இல்லை.

இந் நிலையில் இதுவும் தமிழ் அரசியல் வரலாற்றில் இன்னொரு ஏமாற்றமாக ஆகிவிடுமா என்ற கேள்வியானது இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல, தற்போது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் மத்தியிலும் எழுந்துள்ளது. இலங்கை அரசு தன்னால் ஏற்றுக் எகாள்ளப் பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் கேட்டுள்ளது. இக் கால அவகாசத்தினை ஜெனீவா மாநாடு வழங்கும் என்பது தெளிவாக உள்ளது.

**வாசகர்களே.**

இப் பிரச்சனைகளின் இன்றைய தாற்பரியத்தை தாயகத்தில் இருந்து பார்ப்பதை விட புலம்பெயர் தேசங்களிலிருந்து நோக்குவது சில புரிதல்களைத் தரும் என நம்புகிறேன். ஏனெனில் சில அரசியல்வாதிகள் இப் பிரச்சனையை வைத்தே தாங்கள் இழந்த அரசியல் வாய்ப்புகளை மீட்டெடுக்க முயற்சிக்கின்றனர். இதனால் உண்மையான நிலமைகள் மறைக்கப்பட்டு மீண்டும் உணர்ச்சிகளை அரசியலாக்கும் அவலங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அது பற்றி சற்று ஆழமாக நோக்குவது அவசியமாகும்.

தற்போது லண்டனிலிருந்து ஜெனீவா சென்று ஆர்ப்பாட்டங் களை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் கடந்த காலங்கள் போன்று பயனற்ற ஒன்றாக மாறக்கூடாது என்ற கவலை பலரின் மத்தியில் காணப்படுகிறது. ஏனெனில் இவ் ஆரப்பாட்டங்கள் உணர்ச்சிகளுக்கு அதிக வாய்ப்பை வழங்கியமையால் நியாயமான கருத்துக்கள் அக் கூச்சல்களுக்குள் அமிழ்ந்து போயின.

பல ஆயிரம் மக்களைத் திரட்டி தெருவில் குவித்த போதும் அவை எதிர்பார்த்த இலக்கை அடைய எவ் விதத்திலும் உதவவில்லை. எனவே இவ்வாறான ஆர்ப்பாட்டங்களின் விளைவுகள் குறித்து நாம் மௌனமாக இருப்பின் மீண்டும் இதே சக்திகளே நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பவர்களாக மாறிவிடுவர்.

எனவே அரசுக்கு கால அவகாசம் வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து மிகவும் வெளிப்படையாக இங்கு பேசுவது அவசியமாகியுள்ளது.

## முழுமைக்குமான சரியான கட்டமைப்பே அங்கங்களுக்கும் ஆரோக்கியம் தரும்

இலங்கை அரசு, பல்வேறு தடைகளை எதிர்நோக்கினும் முன்னெப்போதையும் விட தேசிய இனப் பிரச்சனை குறித்தும், நாட்டின் ஜனநாயக மாற்றங்கள் குறித்தும் சில அடிகளை முன்னெடுத்து வருகிறது. அரச கட்டுமானத்தில் ஜனநாயக மாற்றங்கள் ஏற்படாவிடில் தேசிய இனப் பிரச் சனையைத் தீர்க்க முடியாது. இம் மாற்றங்கள் தேசிய இனப் பிரச்சனையை முன்னெப்போதையும் விட காத்திரமாகப் பேசும் வெளியைத் திறந்துள்ளன. சிங்கள மக்கள் மத்தி யிலும் தேசிய இனப் பிரச்சனை சம்பந்தமாக எதிரும் புதிருமான வாதப்பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. தேசிய சிறுபான்மை இனங்களின் ஒத்துழைப்பு இல்லையேல் மகிந்த அரசை வெளியேற்றியிருக்க முடியாது எனத் தெளி வாகத் தெரிந்த நிலையில், தமது முடிவுக்கு தேசிய சிறு பான்மை இனாங்களும் இணைந்து வருவார்கள் எனத் தெரிந்தே 45 சதவீதத்துக்கும் மேற்பட்ட சிங்கள மக்களும் மகிந்தவிற்கு எதிராக வாக்களித்தனர். தேசிய சிறுபான்மை இனாங்கள் வாக்களிக்காது போயிருந்தால் மகிந்தவிற்கு எதிராக செயற்பட்ட அரசியல் சக்திகளின் நிலை இன்று எவ்வாறு இருந்திருக்கும்?

**வாசகர்களே.**

உள்நாட்டில் பாராளுமன்ற தேர்தல் அரசியலே எதிர்பார்த்த முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படுவதற்குத் தடையாக உள்ளது என்பதை நாம் உணருவோமேயானால் முதலில் பாராளுமன்ற அரசியல் சீராக இயங்குவதற்கான அரசியலை நாம் நடத்த வேண்டும். பாராளுமன்ற அரசியலில் சிங்கள பேரினவாத தீவிரவாத சக்திகள் மட்டும் இம் மாற்றத்திற்குத் தடையாக இருக்கவில்லை. தேசிய சிறுபான்மை இனங் களின் அரசியலும் அதற்கான தடைகளாக உள்ளன. தமிழர் கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியிலுள்ள பிரதானமான கட்சிகளை அவதானிப்போமாயின் அவற்றில் ஊழல், தனி நபர் ஆதிக்கம், ஜனநாயகமற்ற போக்கு எனபனவே மலிந்து காணப்படுகின்றன. இந் நிலையில் தற்போதைய அரசு தேசிய இனப் பிரச்னையைத் தீர்க்காது விடில் என்ன காத்திரமான நடவடிக்கைகளை இக் கட்சிகளால் அல்லது தனி நபர்களால் எடுக்க முடியும்?

## மனித உரிமை அமைப்புக்களின் காத்திரமான பாத்திரம்

மனித உரிமைச் சபையின் தீர்மானங்களை நிறைவேற்று வதில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளே தீவிர பங்கினை வகித்து வருகின்றன. இந்த அமைப்புகள் அர சாங்கத்தின் விருப்பமற்ற போக்கினை அடையாளம் காட்டியுள்ளன. குறிப்பாக, இடைக்கால நீதி வழங்குதல், விசேட நீதிமன்றத்தில் சர்வதேச நீதிபதிகளை இணைத்தல், போர்க்குற்றத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பாரையும் நீதியின் முன் நிறுத்துதல், காணாமல் போனோர் பற்றிய விபரங் களைத் திரட்டும் காரியாலயத்தினை அமைத்தல், உண்மை களைக் கண்டறியவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவ தற்கான பொறிமுறையை அமைத்தல் போன்றவற்றில் தயக்கத்தைக் காட்டுவதாக குற்றம் சாட்டியுள்ளன. போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகளை இணைப்பது குறித்து ஜனாதிபதி எதிர்ப்பதனையும், ராணுவம் காணிகளை விடு விக்காமல் இருப்பதனையும், ராணுவம் சிவிலியன்களின் நடவடிக்கைகளில் உதாரணமாக வியாபாரங்களில் ஈடுபடு வதையும் நிறுத்தும்படி கோரியுள்ளன.

இவ் மனித உரிமை அமைப்புகளே சம்பந்தப்பட்ட அரசுகள் மேல் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. ஐ நா மனித உரிமைச் சபையில் நிலமைகளை விளக்கி வரு கின்றன. இவ் அமைப்புகள் காலக்கெடு கொடுப்பது குறித்து எவ்வாறான நிலைப்பாட்டினை எடுக்கின்றன? அரசாங் கத்தின் மீதும், சர்வதேச சமூகத்தின் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் அதேவேளை, இலங்கை அரசு எதிர் நோக்கியுள்ள நெருக்கடிகளையும், அரசியல் பிரச்சனை களையும் கருத்தில் கொள்கிறார்கள். அதன் காரணமாகவே கால அவகாசத்தை வழங்குவதானால் கால எல்லை விதிக்கப்படவேண்டும் என வற்புறுத்துகின்றன.

இவ்வாறானதோர் நிலையில், எந்தவித விளக்கமும் இல்லாமல் சில தமிழ் அரசியற் சக்திகள் உலகமே தாங்கள் சொல்வதைத்தான் கேட்கும் என்பது போல, ஊடகங்களில் அறிக்கைகளை விடுத்து மக்களைத் தொடர்ந்தும் மாயைக் குள் வைத்திருக்க விழைகின்றன. கால அவகாசம் வழங்கா விடில் இவர்களின் அடுத்த நடவடிக்கை என்ன? பாராளு மன்ற பதவிகளைத் துறந்து வீதியில் இறங்கி போராடப் போகிறார்களா? சிங்களப் பகுதிகளில் தினமும் ஆர்ப் பாட்டங்கள் நடைபெறுகின்றன. மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துகிறார்கள். இந்த வாய்வீச்சு தமிழ் மாவீரர் களால் மக்களை வீதிக்கு அழைத்து வர முடியுமா? உசுப் பேத்தும் சவடால் அரசியலின் காலம் மலையேறிவிட்டது.

புலம்பெயர் தேசங்களில் புலிகளை ஆதரித்த தமிழ் தீவிரவாத சக்திகளுக்கும், ஏனைய தமிழ்த் தேசவாத சக்திகளுக்கு மிடையே உட்சண்டைகள் ஆரம்பமாகியுள்ளன. கூட்டமைப் புடன் இணைந்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து தீர்வினை நோக்கிச் செல்ல வேண்டும் என எண்ணும் தமிழ் தேசியவாதிகள் தற்போது துரோகிகளாக வர்ணிக்கப்படு கின்றனர். தமிழீழத்தின் காட்டிக் கொடுப்பாளர்களாக குற்றம் சாட்டப்படுகின்றனர்.

தமது சுய பொருளாதார மற்றும பதவிப் போட்டி நலன் களுக்காக உள்வீட்டு குத்துச் சண்டையில் தீவிரம் காட்டி வரும் இவர்கள் சர்வதேச நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து தாம் நினைக்கிறபடி ஐ நா மனித உரிமை ஆணைக் குழுவின் தீர்மானங்களை மாற்றியமைப்பார்கள் எனபது நம்பக்கூடியதாக இல்லை.

# மலையக பாராளுமன்ற உறுப்பினர் திலகருடன் மகிழ்ச்சியான ஓர் சந்திப்பு



அன்பார்ந்த வாசகர்களே!

மலையக முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரும், இலக்கிய ஆர்வலருமாகிய திலகர் பிரித்தானியா வந்திருந்தார். இளைஞராகிய அவர் அரசியலில் மிகவும் முதிர்ச்சி அடைந்தவராகவும், பிரச்சினைகளின் தாற்பரியங்களை அறிவதில் மிகுந்த ஆர்வம் உடையவராகவும், அதே வேளை அதனை எடுத்து உரைப்பதில் ஓர் ஆசிரியராகவும் இருந்தது மிகவும் ஆர்வத்தை எமக்கு அளித்தது. ஏனெனில் வெறும் சம்பவக் கோர்வைகளை அரசியலாக்கி அதில் உணர்ச்சிகளைக் கலந்து கைதட்டுதல்களை எதிர்பார்த்து அரசியல் நடத்தும் இக் காலத்தில் மலையகத்திலிருந்து காத்திரமானதோர் குரல், கோட்பாடுகளை மையமாக வைத்து பிரச்சினைகளை வெளிப்படுத்தியது மிகுந்த மகிழ்ச்சியை எமக்கு அளித்தது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் தொகுதிகளை வரை யறுத்து, தேர்தல் முறையில் மாற்றம் செய்ய முனையும் இவ் வேளையில் அம்முறையானது மலையக மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களை அவர் விரிவாக ஆய்வு அடிப்படையில் விளக்க முனைவது மிகுந்த ஆர்வத்தை அளித்தது. தமிழர் தரப்பில் இவ்வளவுதூரம் தெளிவான புரிதல் உள்ள எத்தனை உறுப் பினர்கள் இருப்பார்கள்? என்ற சந்தேகம் அவ் வேளையில் எழுந்தது.

இங்கு எமக்கு மிகவும் பரிச்சியமான "தமிழ் தகவல் நடுவம்" தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பான நிபுணர் ஒருவரை ஏற்பாடு செய்து தமது சந்தேகங்கள் தொடர்பான விளக்கங் களைப் பெறுவதற்காக தேசிய சிறுபான்மை இனத்தவர் சார்பில் சிலருக்கு அழைப்பு விடுத்திருந்தது. இத் தேவையை அவர்களும் ஏற்கெனவே வெளியிட்டிருந்தனர். இதன் அடிப்படையில் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் ஒருவரும், மலையகம் சார்பில் இவரும், கூட்டமைப்பு சார்பில் அதன் பிரித்தானிய கிளை உறுப்பினர் ஒருவரும் கலந்து கொண்டனர்.

தேர்தல் முறையை வகுப்பதற்கென அரசு சர்வதேச நிபுணர் ஒருவரை அமர்த்தி அவருடன் இவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திய போதிலும் அந்த நிபுணருக்கு இலங்கையின் தேசிய இனங்களின் கடந்த கால வரலாறு தெளிவாக உரைக்கப் பட்டதா? என்பதில் அவர்களுக்குச் சந்தேகம் எழுந்தது. ஏனெனில் குறிப்பாக மலையக மக்கள் பிரதிநிதித்துவம் படிப்படியாக குறைக்கப்பட்டதற்கான வரலாறு தெளிவாக உரைக்கப்படாவிடில் சரியான அணுகுமுறையை எட்ட முடியாது என அவர்கள் கருதினர். அதே போலவே முஸ்லீம களும் கவலை அடைந்தனர். குறிப்பாக தமிழ், சிங்கள பிரச்சனைகளின் தீர்வுகளுக்கான முயற்சிகளின்போது முஸ்லீம்களை அதில் பங்காளிகளாக இணைப்பதில் தயக்கம் காட்டியதோடு அவர்களை அரச தரப்பாக எடுத்துச் செல்ல விரும்பியது. அரசு முஸ்லீம்களைத் தனித் தரப்பாக அனு மதிக்கவில்லை. நாடு முழுவதும் விரவியுள்ள முஸ்லீம் மக்கள் அம் மக்களுக்கான நியாயமான பிரதிநிதித்துவத்தைப்

( தொடர்ச்சி 9 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் கல்வியின் தற்போதைய பரிதாப நிலைமை

மாதவன்

இலங்கை வாழ் தமிழர்கள் கல்வி விருத்தியை தமது வாழ்க்கையின் தலையாய ஆதாரமாகக் கொண்டிருந் தார்கள் என்பது இன்றைக்கு கடந்த கால வரலாறாகப் போய்விட்டது. வடக்கு - கிழக்கில் மட்டுமல்லாது கொழும்பு மற்றும் கண்டி போன்ற மாநகரங்களிலுள்ள கல்வி நிறு வனங்களிலும் தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். பல்கலைக்கழகங்களின் பல்வேறு துறை களிலும் தமிழர்கள் மிளிர்ந்தனர். அதற்கெதிராக தெற்கிலிருந்து எழுந்த கோசங் களும், தமிழர்கள் தாம் கொண்டிருந்த கல்வி வாய்ப்புக் களைத் தக்க வைத்துக் கொள்ள வடக்கு - கிழக்கில் நடை பெற்ற போராட்டங்களும் தமிழர்களிடையே கல்விக்கான முக்கியத்துவம் எந்தளவு தூரம் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதற்கான ஆதாரங்களாகும்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் இன்று நிலவுகின்ற கல்வித்தராதரம் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களின் பிரதேசங்களில் உள்ள பள்ளிக்கூடங்களின் நிலை மற்றும் இங்குள்ள பல்கலைக்கழகங்களின் நிலை என்பன இங்கு தமிழர்கள் எவ்வளவு தூரம் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டுக்களாகும்.

சாதாரண தரப் பரீட்சை முடிவுகளையும், உயர்தரப் பரீட்சையின் முடிவுகளையும் இலங்கையின் ஏனைய பாகங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கிற போது வடக்கு கிழக்கு மாகாணங்கள் எவ்வளவு பின்தங்கிய நிலையில் உள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது. வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களின் பிரதேசங்களில் இருக்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வழங்கப்படுகிற பட்டக் கல்வியின் தராதரம் பற்றிய கல்வியியல் நிபுணர்களின் அபிப்பிராயங்கள் கவலைகளைத் தருவனவாகவே உள்ளன.

## பாடசாலைகளின் நிலைமைகள்

ஒரு சமூகத்தினுடைய கல்வி வளர்ச்சியில் பாடசாலைகளே மிக அடிப்படையான தளங்களை உருவாக்குபவையாகும். வடக்கு - கிழக்கை பொறுத்தவரையில் தமிழர்களின் பிர தேசங்களில் பாடசாலைகள் எண்ணிக்கை ரீதியில் போதிய அளவு உள்ளன. எந்தவொரு பகுதியிலும் மாணவர்கள் மிகக்குறைந்த அளவு தூரத்துக்குள் தமது பாடசாலைகளுக்கு செல்லக் கூடிய வகையில் பரந்து கிடக்கின்றன. ஆனால், இந்தப் பாடசாலைகளிற் பெரும்பான்மையானவை உரிய கல்விய - தரமான கல்வியை வழங்கும் நிலையில் இருக் கின்றனவா? மாணவர்களின் உயர்கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் பரந்த அறிவு விருத்திக்கும் அவசியமான அடிப்படைகளை வழங்குபவையாக உள்ளனவா? என்னும் கேள்விகள் இங்கு பதில்கள் தேடுகின்றன.

தமிழர்களின் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவற்றில் ஆசிரியர்களின் எண்ணிக்கை போதாது எனவும் உரிய பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் குற்றச் சாட்டுக்கள் பரவலாக உள்ளன. ஆனால், தமிழர் பகுதி களில் உள்ள மொத்த பாடசாலைகளினதும் மாணவர்கள் தொகைக்கு உரிய அளவிற்கு சராசரியாக இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை இங்கு உள்ளது என்னும் உண்மை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், இந்த ஆசிரியர்கள் அனைத்து பாடசாலை களையும் நோக்கி உரிய முறையில் பரவலாக்கப்பட்டிருக்கிறார்களா? என்ற கேள்வியை எழுப் பினால் பதில் "இல்லை" என்பதாகவே உள்ளது.

## ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாசாரம்

பெருந்தொகையான பாடசாலைகளில் மிகக் குறைந்த அளவான மாணவர்களே உள்ளனர் எனக் குறிப்பிடப் படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்களில் 40 மாணவர்களுக்கும் குறைவான வர்களே உள்ளனர் என்னும் நிலைமை காணப்படுகிறது. ஒரு பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் எவ்வளவு குறைவாக இருந்தாலும் அவர்களுக்கு பல்வேறு பாடங்களையும் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் அவசியமாகும். குறைந்தளவு மாணவர்களை கொண்ட பள்ளிக்கூடங்களில் சராசரி மாணவர் விகிதாசாரத்திற்கும் அதிகமாக ஆசிரியர்கள் பகிரப்படுகின்ற போது கூடுதலான மாணவர்களைக் கொண்ட பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிகழ்வது இயல்பாகின்றது.

இதேவேளை மற்றொரு பக்கத்தில், ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டுமே பின்தங்கிய பகுதிகளில் - பின் தங்கிய மாவட்டங்களில் - பின்தங்கிய கிராமப் புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கிறார்கள். பின்னர் ஏதோ ஒரு வகையாக செல் வாக்கு செலுத்தி, இடமாற்றங்களை பெற்று தங்களது சொந்த ஊர்களுக்கோ அல்லது தங்களது சொந்த வீடுகளுக்கு அண்மித்ததாகவோ உள்ள பள்ளிக்கூடங்களுக்கு சென்று விடுகின்றனர். இதனால் பொதுவாக நகரப்புறங் களில் மிக அதிக அளவான ஆசிரியர்கள் இருப்பதுவும் கிராமப்புற பள்ளிக் கூடங்களில் மிக குறைந்த அளவான ஆசிரியர்கள் இருப்பதுவும் ஏற்படுகிறது.

## இரண்டாம் தர பாடசாலைகள் அக்கறையற்ற மாகாணசபை

எமது கல்விக் கட்டமைப்பில் இரண்டு வகையான பாட சாலைகள் உள்ளன. ஒன்று மத்திய அரசாங்கத் தினால் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பாடசாலைகள். ஏனையவை மாகாண அரசாங்கத்தினால் நிர்வகிக் கப்படுகின்ற





சம்பூரில் மக்கள் மீளக் குடியமர்ந்த இடத்தில் பாடசாலையும் அதன் மலசல கூடமும்

பாடசாலைகள். மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப் படுகின்ற பாடசாலைகள் பிரபலமான பாட சாலைகளாகவும், போதியளவு ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகளாகவும், பல்வேறு வசதிகளையும் கொண்டவையாகவும் இருப்ப தனால் பெரும்பாலும் பெற்றோர்கள் அந்தப் பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்து விட வேண்டும் என போட்டியிடுகிறார்கள்.

அதே அளவு தராதரத்துடன், வசதி வாய்ப்புக்களுடன் மாகாண அரசாங்கத்திற்குட்பட்ட பாடசாலைகள் இல்லை என்ற அபிப்பிராயம் பொதுமக்களிடம் பரவலாக உள்ளது. அதில் பெருமளவு உண்மையும் உள்ளது. இதன்னால் மாகாண அரசாங்க நிர்வாகத்திற்கு உட்பட்ட பெருந்தொகை யான பாடசாலைகள் இரண்டாம் தரப் பாடசாலைகளாகவே - தங்களது பிள்ளைகள் தரமான கல்வியைப் பெறுவதற்குத் தகுதியற்ற பாடசாலைகளாகவே மக்களால் கருதப்படு கின்றன.

பள்ளிக்கூட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவது என்ற பேரில் 5 ம் ஆண்டு மாணவர்களுக்கு போட்டிப்பரீட்சை நடாத்துதலும் அதில் பெறப்படும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஆண்டுகளுக்கான கல்விக்கு மாணவர் களை சேர்த்தலும் எனக் கடைப்பிடிக்கும் கல்விக் கொள்கை யானது இலங்கையின் கல்விமுறையை பொதுவாகவே சீரழித்திருக்கிறது. அதிலும் வடக்கு கிழக்கில் குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கும் ஏனையவற்றுக்கும் இடையே உள்ள பிரபல இடைவெளிகள் இங்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத் தியுள்ளது. 5ம் ஆண்டு பரீட்சையின் பெறுபேறுகளை வைத்து குறிப்பிட்ட விகிதாசார மாணவர்கள் மட்டும் பிரபல மான பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிக்கப்படுவதனாலும், 5ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சைகளில் பெறப்படும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களைப் பாராட்டும் விழாக்கள் நடாத்தப்படுவதனாலும் ஓரளவிற்கு குறைவாக புள்ளிகளை பெற்ற மாணவர்கள் தோற்றுப் போனவர் களாகவும் தகுதியற்றவர்களாகவும் எண்ணப்படுகின்ற ஓர் உளவியல் பிரச்சினை உருவாகும் நிலை இங்கு ஏற்பட்டிருக் கின்றது. இந்த முறையானது பெருந்தொகையான மாணவர்கள் மத்தியில் தமது கல்வி பற்றிய அக்கறையைப் பாதிக்கிறது.

ஆசிரியர்கள் நியமன தெரிவுகளில் அரசியல் மற்றும் ஏனைய செல்வாக்குகள் செயற்படுவதனால் பள்ளிக் கூடங்களையும், மாணவர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்ட அடிப்படையில் உரிய பாடங்களை கற்பிப்பதற்கான - தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் போதிய அளவில் முறைப்படி தெரிவு செய்யப்படுவதில்லை. ஆசிரிய நியமனங்களிலும் பள்ளிக் கூட நிர்வாகங்களிலும் இங்கு பெரும் ஊழல்களும் மோசடிகளும் இடம் பெறுகின்றன. இந்த நிலைமைகள் பற்றி மக்களிடையே பொதுவாக பேசப்படுகின்ற நிலை இருப்பினும் அது பற்றிய விழிப்புணர்வோ எதிர்ப்புக்களோ காணப்பட வில்லை. இதன் விளைவாகவே பெரும்பாலான பள்ளிக் கூடங்களில் உரிய பாடங்களை கற்பிப்பதற்கான தகுதியுடைய ஆசிரியர்கள் இல்லை எனும் நிலை தொடர்கிறது. அரசியல் மற்றும் வேறு குறிக்கோள்களுடன் ஆசிரிய நியமனங்கள் மற்றும் ஆசிரிய இடமாற்றங்கள் என்பன தாராளமாகவே நடை பெறுகின்றன. பாடசாலைகளின் தராதரங்களை ப்ராமரிப் பதிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்து வதிலும் மாகாண அரசாங்கமோ மத்திய அரச நிர்வா கிகளோ அக்கறைகாட்டுவதாக இல்லை.

30 ஆண்டுகால யுத்தத்தின் அழிவுகள்ள கடந்து கல்வி யின் ஊடாக தமது சமூக, பொருளாதார வளர்ச்சியை எதிர் நோக்கியிருக்கும் தமிழர் சமூகத்திற்கு கல்வி அபிவிருத் திக்கான ஊக்கங்களும் வாய்ப்புக்களும் நம்பிக்கைகளும் ஏற்படுத் தப்படுவது அவசியமாகும். அதற்குரிய வகையில் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், கல்வித்துறையில் இருக்கின்ற தமிழ் உயர் அதிகாரிகள் ஆகிய அனைவரும் தமிழர்களின் கல்வி நிலையை உயர்த்துவதில் அக்கறையோடு செயற்படாவிட்டால் இன்றைய நிலையில் இருந்து மீட்சி பெறுவது சிரமமாகும்.

## மலையக பாராளுமன்ற ...

( 8 ம் பக்கத் தொடர்ச்சி )

பெறுவத்றகு உரிய சமன்பாட்டினை வரைவது அவர்களின் தேவையாக இருந்தது.

தமிழ்க் கூட்டமைப்பினர் இப் பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டவில்லை என்பது இவர்களின் குறைபாடாக இருந்தது. ஏனெனில் புதிய முறையில் 6 பாரளுமன்ற ஆசனங்களே வட பகுதிக்கு வழங்கப்படவுள்ளது. இருப்பினும் வெளியேறிய மக்கள் மீளவும் குடியேறுவதற்கான கால அவகாசத்தைக் கருதி அடுத்த 10 ஆண்டுகளுக்கு 4 மேலதிக உறுப்பினர் களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் கூட்டமைப்பினர் தேர்தல் மாற்றத்தினால் ஏற்படக் கூடிய பிரச்சனைகள் குறித்து அதிகம் ஆர்வம் காட்டவில்லை. கிழக்கு மாகாணம் குறித்தும் அவர்களிடம் கருத்து உள்ளதா? என்பதுவும் சந்தேகமே.

இந் நிபுணரைச் சந்தித்த பின் மிகவும் திருப்தியடைந்த அவர் கள் அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணருடன் இவரின் உதவியுடன் மீண்டும் பேச தீர்மானித்துள்ளனர். முஸ்லீம் காங்கிரஸ், முற்போக்கு கூட்டணி சார்பில் வந்திருந்த பைஸர், திலகர் ஆகியோர் தேசிய இனங்களுக்கான பாது காப்பு கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் காத்திரமான கருத்தைக் கொண்டிருப்பது மிகவும் செயலூக் கத்தைத் தந்தது. புலம்பெயர் தமிழர்கள் இப் புதிய சந்ததி அரசியல் சக்திகளுக்கு மேலும் ஆதரவு வழங்கவேண்டும்.

எனவே எமது தாயகத்தில் காணப்படும் சந்தர்ப்பவாத அரசியலைத் தோற்கடிக்கும் சக்தி வாய்ந்த விசைகள் தோற்றம்பெற்று வருகின்றன என்ற நம்பிக்கை எமது பணிகளை மேலும் வலுவாக்க உதவும் என நம்பகிறேன். இங்கு ஆட்பலம் அல்ல முக்கியமானது பதிலாக சக்தி வாய்ந்த, செயற்திறன் மிக்க கருத்துக்களே அவசியமாக உள்ளன. அதனைத் தாங்கிச் செல்லும் மனிதர்களின் இணைப்பும் கூடவே தேவையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலை உயர கடைச்சாப்பாடுகள் விலை உயரும் எதன் விலை குறைந்தாலும் உயர்ந்த விலை இறங்காது

## இது இங்குள்ள வியாபார சூத்திரம்

**சித்திரகுப்தன்**

இன்றைய அரசாங்கம் கடந்த வரவு செலவுத் திட்டத்தோடு விதிப்புகளில் ஏற்படுத்திய மாற்றம், குறிப்பாக "வற் வரி" எனப்படும் "மதிப்புக் கூட்டல் வரி"யை அதிகரித்தமையால் பொருட்களின் விலைகள் பொதுவாகவே அதிகரித்தன. இந்த வற் வரி அதிகரிப்பால் சாதாரண மக்களின் அடிப்படை உணவு நுகர்வுப் பொருட்களான அரிசி, பருப்பு, பால் மா, சீனி போன்றவற்றின் விலைகள் திடீரென அதிகரித்தன. அதனை காரணமாகக் கொண்டு இலங்கை முழுவதுவும் சாப்பாட்டுக் கடைகளில் உணவு வகைகளின் விலைகள் 20 தொடக்கம் 50 சதவீதம் வரை உயர்த்தப்பட்டன.

இந்த விலை உயர்வுகள் இலங்கை முழுவதுவும் அரசாங்கத்துக்கு எதிரான ஒரு பதட்டத்தை உருவாக்கியது. கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தென்னிலங்கை மக்களின் பிரதிநிதிகள் மக்களின் அடிப்படையான உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு எதிராக குரலெழுப்பினர். உணவுப் பொருட்களையும் ஏனைய அடிப்படை நுகர்வுப் பண்டங்களையும் வற் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென கோசங்கள் எழுப்பினர். வீதிகளில் இறங்கி போராடினர். இவற்றின் விளைவாக ஜனாதிபதியும் பிரதமரும் நிதி அமைச்சரும் விலை உயர்வுகளின் பாதிப்புக்களை உடனடியாகவே உணர்ந்து கொண்டனர். அதன் அடிப்படையில் அரசாங்கம் உடனடியாக குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் - குறிப்பாக அரிசி, சீனி, பால் மா, மீன் ரின், சில பருப்பு வகைகள் போன்றவற்றை வற் வரி விதிப்புகளிலிருந்து விலக்கியது மட்டுமல்லாது, அப்பொருட்களான நியாய விலைக் கட்டுப்பாடுகளையும் விதித்தது. குறிப்பிட்ட பொருட்களை அறிவிக்கப்பட்ட விலைக்கு மேலாக வியாபாரிகள் விற்பனை செய்யக் கூடாது எனவும் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இவ்வாறாக அடிப்படை உணவுப் பண்டங்கள் சந்தைகளில் கட்டாய கட்டுப்பாட்டு விலை முறைக்கு உட்பட்டு குறைவடைந்தன. 20 சதவீதத்துக்கு உயர்வடைந்த அவற்றின் விலைகள் பழைய நிலைக்குத் திரும்பின. விலை உயர்வு தற்காலிகமான ஒரு பழைய விடயமாக ஆனபோதிலும் அதன் தாக்கத்தால் விலை உயர்ந்த தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் விலைகள் கடைகளில் குறைக்கப்படவில்லை.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து குறுகிய காலத்துக்கு உள்ளேயே எரிவாயுவின் விலையைக் கணிசமாகக் குறைத்தது. அண்மைக் காலங்களில் மரக்கறிளின் விலைகளில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு எதுவும் ஏற்படவில்லை. சொல்லப்போனால், பல மரக்கறிகளின் சந்தை விலைகள் கணிசமாக குறைந்திருக்கின்றன என்பது தான் உண்மை.

இந்த காலகட்டத்தில் தொழிலாளர்களின் கூலியில் உயர்வு எதுவும் ஏற்படவில்லை. தனியார் துறைகளில் வேலை செய்யும் எவருக்கும் எந்த நிறுவனமும் எந்தவொரு வியாபாரியும் சம்பளத்தை அல்லது நாளாந்தக் கூலியை உயர்த்தவில்லை

இலங்கை அரசாங்கம் வற் வரி எனும் மதிப்புக் கூட்டல் வரியை சேவைத்துறைகளிலும் அதிகரித்துள்ள தெனினும், அவை கடைகளில் உணவுகளின் விலைகள் அதிகரிப்பதற்குக் காரணமாக முடியாது. ஏனெனில், இங்கு சாதாரணமாக உள்ள தேனீர்கடைகளில் அல்லது சாப்பாட்டுக் கடைகளில் அந்த வரி அறவிடப்படுவதில்லை.

### ஏட்டுச் சுரைக்காய் எளியோர்க்கு உதவாது

தேனீர் மற்றும் சாப்பாட்டுக் கடைகளில் தற்காலிகமாக ஏற்பட்ட காரணத்தைக் காட்டி உயர்த்தப்பட்ட விலைகள், அதற்கான காரணங்கள் விலக்கப்பட்ட போதிலும் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் விலைகள் குறைக்கப்படவில்லை. தான் தயாரித்த பண்டத்தின் விலையை நிர்ணயிப்பது கடை வியாபாரிகளின் சுதந்திரம் எனவும் அதேபோல அவற்றை நுகர்வோரும் விற்கப்படும் விலைகளை ஏற்று கொள்வனவு செய்யவும் அல்லது கொள்வனவு செய்யாமல் விடவும் தீமான சுதந்திரம் உள்ளது எனவும் சந்தைத் தத்துவம் பேசுவது சரியாகாது.

இலங்கையில் குறிப்பாக நகரங்களில் உள்ள மக்களின் உணவு பழக்கத்தில் தேனீர் மற்றும் சாப்பாட்டுக் கடைகளின் பங்கு கணிசமானதாகும். எனவே அடிப்படை உணவுப் பொருட்களின் விலையேற்றம் மக்களைப் பாதிக்கிறது எனக் கண்டு அவற்றின் விலைகளை குறைத்த அரசாங்கம், அதேவாறாக உணவு வகைகளின் விலைகளும் குறைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். உணவு தயாரிப்பதற்கான மூலப் பொருட்களின் விலைகள் அதிகரித்த போது கணம் கூட தாமதிக்காமல் உடனேயே தயாரித்த உணவு வகைகளின் விலைகளை அதிகரித்த வர்த்தகர்கள் இந்த மூலப் பொருட்களின் விலைகள் குறைந்த பொழுது தாங்கள் தயாரித்து விற்பனை செய்யும் உணவு வகைகளின் விலைகளைத் தாங்களாகவே குறைத்திருக்க வேண்டும். அப்படியெதுவும் நடைபெறவில்லை. இறுதியில் பாதிக்கப்படுவோர் நுகர்வோரே எனும் நிலைமையே உறுதியாக்கப்பட்டுள்ளது.

### காட்டு நியமங்களை அனுமதித்தால் தலைவிதிகளே சமூக நீதியாகும்

மூலப் பொருட்களின் விலைகள் கூடினால் முடிவுப் பொருட்களின் விலைகள் கூடும். ஆனால் மூலப் பொருட்களின் விலைகள் குறைந்தாலும் முடிவுப் பொருட்களின் விலையில் குறைவு ஏற்படாது என்பது இங்கு ஒரு பொருளாதார விதியாக செயற்பட்டு வருகிறது. இந்த விதி இங்கே தனிப்பட்ட வியாபாரிகள் விடயத்தில் மட்டுமல்ல. அரசாங்கமும் இதே விதியைத் தான் கடைப்பிடிக்கிறது.

பெற்றோலிய விலைகள் சர்வதேச சந்தையில் 75 ரூபாவிலிருந்து 125 ரூபாவுக்கு உயர்ந்த போது அதேவேகத்தில் பாவனையாளர்களுக்கான பெற்றோலிய பண்டங்களின் விலைகளை உயர்த்திய அரசாங்கம் அதே பெற்றோலிய விலைகள் 50 சதவீதத்துக்கும் மேல் குறைந்தும் ஒப்புக்காக 10 சதவீதமளவில் மட்டுமே விலைக் குறைப்பு செய்தது. சர்வதேச விலையின் வீழ்ச்சிக்கு ஏற்றவிதமாக உள்நாட்டில் பெற்றோலிய பண்டங்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் வருமானத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக காட்டாட்சித் தனமாக அரசாங்கம் வரி விதிப்புகளையும் பண்டங்களின் விலை நிர்ணயங்களையும் மேற்கொண்டால் நாட்டில் இலாப நோக்கத்தை மட்டுமே கொண்ட வியாபாரிகள் பொதுமக்கள் நலன் மீது எப்படி அக்கறை கொள்வார்கள். வியாபாரிகள் விலைகளை உயர்த்துவார்கள். ஆனால் ஒரு சில கட்டாயமான காரணங்களைத் தவிர, வேறு வகைகளில் தமது விற்பனைப் பொருட்களின் விலைகளைத தாங்களாக குறைக்க மாட்டார்கள் - இன்றைய திறந்த பொருளாதார கட்டமைப்பில் அவர்களை விலைகளைக் குறைக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது என்பதை புரிந்து கொண்டே அரசாங்கம் செயற்பட வேண்டும்.

தமது ஆட்சி அதிகாரத்துக்கு ஆதாரமாக இருக்கும் முதலாளிகளின் நன்மைக்காகவேதான் வரிகளை உயர்த்தி பின்னர் குறைப்பதை அரசாங்கம் தனது பொருளாதாரத் தந்திரமாகக் கடைப்பிடித்ததோ என சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. வியாபாரிகளின் மகிழ்ச்சியே அரசாங்கத்தின் இலட்சியமானால் பொதுமக்கள் நடுரோட்டுக்கு இறங்குவதைத் தவிர வேறு வழியிருக்காது.

# எண்ணெய்க்கென ஆரம்பித்த யுத்தங்கள் என்றைக்கும் முடியாதென தொடர்கின்றன

**லண்டனிலிருந்து வி.சிவலிங்கம்**

அன்பார்ந்த வாசகர்களே!

மேற்கு நாடுகளில் தற்போது காணப்படும் தேசியவாத நிலைமைகள் வரலாற்று ரீதியாக ஆபத்தான நிலைமைகளைத் தோற்றுவித்த போதிலும், தற்போது கூர்மை அடைந்துள்ள அகதிகள் பிரச்சனைக்கு உதவியாக இருக்குமென நம்புகிறேன். ஏனெனில் அகதிகளின் வருகைக்கு மிகவும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வரும் வலதுசாரி சக்திகள், மக்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து வெளியேறுவதற்கான உள்நாட்டு நிலைமைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டிய நிலைமையில் உள்ளனர்.

உதாரணமாக சிரிய நாட்டில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக சுமார் 15 மில்லியன் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். 21ம் நூற்றாண்டின் மிகப் பெரிய மனித அவலமாக இது கருதப்படுகிறது. இம் மக்களைக் கூடாரங்களில் வைத்து எவ்வளவு காலம் பராமரிக்க முடியும்? சிரிய அதிபரை பதவியிலிருந்து அகற்றப் போவதாகக் கூறிய மேற்குலக அரசுகள் பெருமளவு ஆயுதங்களை சிரிய அரசின் எதிர்ப்பாளர்களுக்கு வழங்கினர். ஆனால் அந்த ஆயுதங்கள் அமெரிக்க ஆதரவு ஈராக் அரசாங்கத்தைப் பயமுறுத்தி வருகிறது. பிரான்ஸ் பரப்பளவு நிலத்தை இஸ்லாமிய தீவிரவாதிகள் கட்டுப்படுத்தியுள்ளனர்.

இந் நிலையில் ரஷ்யா இப் பிரச்சனையில் சிரியாவிற்கு ஆதரவாகச் சென்று மிகப் பெரும் மனித அழிவை மேற்கொண்டு சிரிய அதிபரைப் பாதுகாத்துள்ளது. இதனால் அகதிகள் வெளியேற்றம் குறைந்துள்ளது. இதுவரை சிரிய அதிபரை பதவி இறக்க வேண்டுமென கூறிவந்த நாடுகளின் அரசுகள் மௌனமாக சிரிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. மொத்தத்தில் அகதிகள் வெளியேற்றத்தைத் தடுக்க உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பது ஏற்றுக்கொண்ட கொள்கையாக மாறி வருகிறது.

இதேவேளை மனித இனத்தின் பேரழிவுக்கு ஆபத்தாக விளங்கிய பாஸிச உள்ளடக்கத்துடன் கூடிய இந்துத்துவா தேசியவாதம் எமக்கு அண்மையில் உள்ள இந்தியாவில் பரவி வருவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இது என்னென்ன பேரழிவுகளை இந்தியாவிலும் சுற்றியுள்ள நாடுகளிலும் ஏற்படுத்தப் போகிறதோ என்ற கவலையுடன் இக்கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

# சம உரிமை இயக்கத்தின் கூட்டு முயற்சி




சம உரிமை இயக்கம், வடக்கு மக்களின் பிரச்சினைகளை தெற்கிற்கு எடுத்துச் செல்லும் நோக்கில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாடு யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் மார்ச் 14 ம் திகதி நடைபெற்றது.

மக்கள் தமது நிலஉரிமை, காணாமல் போனவர்கள் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, படித்து பட்டம் பெற்றவர்களின் வேலைவாய்ப்பின்மை என்பன தொடர்பாக தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

அதேபோல சைட்டம் உட்பட தெற்கிலும் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள் வடக்கு தெற்கிற்கு இடையே ஒரு புரிதலை ஏற்படுத்தும் விதமாக கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக மார்ச் 17 தொடக்கம் 23 வரை தொழிலாளர்கள் மாணவர்கள் பெண்கள் என தொடர் சத்தியாக்கிரக இயக்கத்தை நடாத்துகிறார்கள் இதற்கு ஆதரவாகவே இந்த ஊடகவியலாளர் மாநாடு நடாத்தப்பட்டது.

சமஉரிமை இயக்கத்தின் தோழர் யூட் தலைமையில் நடந்த இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் சுகு சிறிதரன், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தலைவர் தோழர் சி.க. செந்திவேல், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளர் அன்ரன் மற்றும் இலக்கிய , சமூக, அரசியல் ஆர்வலர் செயற்பாட்டாளர் சி. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு தெற்கிற்கு எடுத்துச் செல்லும் நிகழ்வுக்கு, தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவும் சிங்கப்பூரும் - இலங்கையுடன் ஓர் ஒப்பீடு

தோழர் சிவா

மலாய்க்காரர்கள், சீனர்கள், தமிழர்கள் (இந்தியர்கள்) ஆகிய இனங்களைக் கொண்ட நாடு மலேசியா.

மொத்த சனத்தொகை 30 இலட்சம்.

இலங்கையில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருப்பதுபோல், மலேசியாவில் மலாய்க்காரர்கள்.

எனினும், சீனர்கள் மற்றும் தமிழர்களின் கூட்டுத் தொகையுடன் ஒப்பிடும்போது, அந்தப் பெரும்பான்மை-சிறுபான்மை வித்தியாசம் இலங்கையிலுள்ள பெரும்பான்மை- சிறுபான்மை வித்தியாசத்திலும் குறைவு.

சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் சேரந்தால்தான் பெரும்பான்மை அரசாங்கம் அமைக்க முடியும்.

இலங்கையைப்போல் அல்லாது தமிழர்களின் பெரும்பான்மையினரைப் பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் கட்சியான 'மலேசிய இந்திய காங்கிரஸ்'

மலேசிய அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகித்து வருகின்றது.

சீன இனத்தவர்களே தொழில், வர்த்தக துறைகளில் அதிக ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

பல வருடங்களுக்கு முன்னர், ஒரேயொரு முறை அங்கு இனக்கலவரம் வெடித்தது. ஆனால் பாரதூரமான விளவுகள் ஏற்படாதவாறு விரைவில் கட்டுப்படுத்தப்பட்டது.

பெரும்பான்மை இனத்தவர்களில் பின்தங்கிய மாலாய்க்காரர்கள் முன்னேற வாய்ப்பாக பிரத்தியேகச் சலுகைகள் அளிக்க வேண்டும் என்ற கொள்கையுடன் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

பெரும்பான்மை இனத்தவரின் மாலாய் மொழிதான் ஆட்சி மொழி. பெரும்பான்மை இனத்தவரின் இஸ்லாம் மதத்திற்குத்தான் முன்னுரிமை.

எனினும் மற்றைய இனத்தவர்களும் தங்கள் மொழியையும், மதங்களையும், சடங்குகளையும் கடைப்பிடிக்கத் தடைகள் இல்லை.

அங்கும் எல்லா மட்டத்திலும் லஞ்சம், ஊழல், கையூட்டல் ஆகியன வியாபித்திருக்கிறது.

இப்பொழுது உலகை ஆட்டிப்படைக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதம் அங்கும் ஊடுருவி வருவதாகவும், அது நாட்டின் ஸ்தரத்தன்மையை பாதிக்கும் என்ற பயம் இருக்கிறது.

இலங்கையைப் போல் இயற்கை வளம் மலேசியாவிலும் அதிகம் உள்ளது. மலேசியாவில் நிலக்கீழ் உலோக மற்றும் இராசயன கனிவளங்கள் இலங்கையை விட சற்று அதிகமாகவே உள்ளது,

இருப்பினும் இலங்கையிலும் சில உலோக மற்றும் இரசாயன நிலக்கீழ் கனி வளங்கள் கணிசமாக உள்ளன.

இலங்கையைப்போல், இனங்களுக்கிடையான வேறுபாடுகளை முரண்பாடுகளாக்கி முன்னிலைப்படுத்தியும், அதிகரித்தும், ஒரு இனத்தை இன்னொரு இனத்தின் எதிரியாக சித்தரித்தும் அரசியல் நடாத்தப்படும் நிலைமை மலேசியாவில் இல்லை.

மலேசியாவானது இலங்கைக்குப் பிறகே காலனி ஆதிக்கத்திலிருந்த விடுபட்டது - தனது தேசிய பொருளாதார அபிவிருத்தியில் குறியாக இருந்து மூன்று தசாப்தங்களுக்குள் பெரும் வளர்ச்சியை அடைந்தது.

சிங்கப்பூர் கடலால் சூழப்பட்ட ஒரு சிறிய நாடு,

மொத்த சனத்தொகை 55 இலட்சம் பேர்.

சீனர்களே பெரும்பான்மையினர் அதாவது 76 சதவீதத்தினர்

மலாய்க்காரர்கள் 15 சதவீதத்தினர்,

ஏனையோர் இந்தியர்கள். பெரும்பாலும் தமிழர்கள்.

துறைமுகத்தைத் தவிர இயற்கை வளம் எதுவும் இல்லையென்றாலும்,

நன்றாக நிர்வாகிக்கப்படும் ஒரு பெரிய நிறுவனம்போல் ஒழுங்கமைக்கப்பட்ட நாடு.

சிங்கப்பூரின் அரசாங்கமும், நிர்வாகங்களும் இலஞ்சம், ஊழல்கள் அற்றவை.

நடைமுறையில் ஒரு கட்சி ஆட்சிதான் நடை பெறுகிறது.

எனினும் தகுதியின் அடிப்படையிலேயே பாராளு மன்றப் பிரதிநிதிகள்,

அந்தந்த துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களே அமைச்சர்கள்.

இனம்., சமயம், மொழி ஆகிய வேறுபாடுகளுக்கு இடம் அளிக்காத அரசியல்,

அதற்கேற்ற அரசியல் சாசனம்.

ஆங்கிலமே உத்தியோக மொழி.

ஆனால் சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளுக்கு அரசு ரீதியில் அந்தஸ்து.

பாடசாலைகளில் அனைத்து மாணவர்களுக்கும், ஆங்கிலமும், தத்தம் தாய் மொழியும் கட்டாய பாடங்கள்.

மாறி வரும் சமூக, பொருளாதார சூழலுக்கேற்ப, மக்களின் நீண்டகால நலனிற்கே முக்கியத்துவம் அளித்து சட்டங்களும், சீர்திருத்தங்களும், ஒழுங்குகளும் அவ்வப்போது ஏற்படுத்தப்படுகின்றன.

அரசியல் ஆதாயங்களுக்காக மட்டுமே தடைகள் போட முனைந்து செயற்படும் எதிர்க்கட்சிகள் அங்கு இல்லை.

சிங்கப்பூரில் மனித உரிமைகள் இல்லை, அரசியல் சுதந்திரம் இல்லை என்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

'மனித உரிமைகள்' என்பது குற்றம் புரிபவர்களுக்குச் சாதகமாக இருப்பது என்ற வகையிலும், 'அரசியல் சுதந்திரம்' என்பது நாட்டிற்கு ஸ்திரத்திற்கும், மக்களின் நீண்டகால நலனுக்கும் பாதிப்புகளை விளைவிப்பது - மக்களை அழிவை நோக்கி இட்டுச் செல்லும் செயற்பாடுகளுக்கும் துணை போவது என்ற வகையில் இருக்கப்படாது என்பதே அவர்கள் வாதம்.

அங்கு, இராணுவத்திற்கு சிவில் சமூகத்தில் அறவே இடமில்லை.

பொலிஸ் உட்பட, அரச பாதுகாப்புப் படையினரின், நீண்ட கரங்கள், அத்துமீறல்கள், அங்கு இல்லை.

இலங்கையில் மலேசியா போன்று எண்ணெய் வளங்கள் இல்லையென்றாலும், மற்றைய வளங்கள் உண்டு இலங்கையில் சிங்கப்பூரிலும் மேலான துறைமுகங்கள் உண்டு. மலேசியாவினதும், சிங்கப்பூரினதும் வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்ந்து, நல்லவற்றைப் பின்பற்றி நடைமுறைப்படுத்தும் வரை, இலங்கையில் வளர்ச்சி என்பது குறைவளர்ச்சிப் பிள்ளை போலவே இருக்கும்.

## ஏமாற்று தமிழ்த் தேசிய கதம்ப வேடதாரிகளை மக்கள் அரசியல் அரங்கிலிருந்து ஓரம் கட்ட ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

இலங்கை அரசாங்கத்துடன் திருட்டுத்தனமான உறவுகளை வைத்துக் கொண்டு தமிழர்கள் மத்தியில் மட்டும் வெற்றுக் கோசங்கள் போடுகின்ற - சர்வதேச நாடுகள் பற்றிய பொய்யான மாயைகளை உருவாக்குகின்ற - தமிழர்களுக்கான அரசியற் தீர்வை அடைவதற்கான உருப்படியான செயற்திட்டம் எதுவுமில்லாமல் போலியான சுலோகங்களுடன் செயற்படுகின்ற ஏமாற்று வேடதாரி அரசியல்வாதிகளை தமிழ் மக்கள் இனம் கண்டு தோற்கடிப்பது அவசியம் என தோழர் சிறீதரன் குறிப்பிடுகிறார்.

வடக்கு - கிழக்கில் 9000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில்லை!

40000 தமிழ் இளைஞர்கள் குறைந்தபட்சமாயினும் திருப்தியான வேலைவாய்ப்பு பெற முடியாதுள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெண்கள் தலைமை தாங்கும் சுமார் 50000 குடும்பங்கள் சுய கௌரவமாக -பாதுகாப்பாக வாழுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் இருக்கிறார்கள்!

வடக்கு - கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் நல்ல குடிநீர் இல்லாமல் அல்லற்படுகிறார்கள்!

ஆசிரியர்கள் பற்றாக்குறையும், அடிப்படை வசதிகள் இல்லாமலும் முறையான கல்வி நிர்வாகமும் இல்லாத பள்ளிக் கூடங்களே வடக்கு-கிழக்கில் ஏராளம்!

மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகளில் அதிகரித்த நோயாளர்கள், படுக்கை வசதி நெருக்கடிகள், ஆனால் மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் வெறும் கட்டடங்கள் மட்டுமே உள்ளன!

பேரூந்துகளின் வேகம் யமன் பாசக்கயிறோடு திரிவது போல் பறக்கின்றன!

சுத்தம், சுகாராதாரம், நல்லகுடிநீர் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டிய உள்ளூராட்சி நிர்வாகங்கள் தமது கடமைகள் எதையும் சரிவரச் செய்யாமல், மக்களைத் தண்டிப்பதிலேயே அக்கறையாக உள்ளன.

எங்கும் நுளம்புத் தொல்லை!

எங்கும் டெங்கு நோய் அபாயம்!

மழை வெள்ள அழிவுகளுக்கும் நிவாரணம் இல்லை!

மழை இல்லாததால் ஏற்படும் வரட்சிக்கும் நிவாரணம் இல்லை!

இதேவேளை, மாகாண சபை ஊருக்கு உதவாத தீர்மானங்களை வைத்து நாடக வசனங்களை பேசுவதிலும், அவற்றை பத்திரிகைகளிற் பிரசுரித்து குதூகலம் காண்பதிலும் காலத்தைப் போக்குகிறது. தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் இது நல்ல வியாபாரம். மாகாண அமைச்சர்கள் தாங்கள் எதைச் செய்வதாக இருந்தாலும் தமக்கு தனிப்பட்ட முறையில் என்ன கிடைக்கும், என்ன ஆதாயம் என்பதிலேயே குறியாக உள்ளனர். உள்ளூர் மக்களின் அவலங்ளைப் போக்குவதிலோ அல்லது அவசரமான தேவைகளைக் கவனிப்பதிலோ அக்கறை எதவுமில்லாமல் [illegible] அடிக்கடி அறிக்கை விடுவதற்கு இங்கு ஒரு முதலமைச்சர். மாகாண ஆட்சியின் சீர் கேடு, கையாலாகாத்தனம், ஊழல் மோசடிகளை இல்லாமற் செய்வதில் அவர் நாட்டமெதுவும் காட்டுவதாக இல்லை

ஆரசாங்கம் அபிவிருத்தி வேலைகளைச் செய்து தமிழர்களை ஏமாற்றப்பார்க்கிறது எனவும், அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களை அரசாங்கம் விலைக்கு வாங்கப் பார்க்கிறது என்று கூறியும்! தாங்கள் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கே பாராளுமன்றம் போவதாகச் சொல்லி மக்கள் வாக்குகளைப் பெற்று சென்றவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். தங்களுக்கு வேண்டிய சொந்த அபிவிருத்திக்கான தேவைகளையும், தமது உறவினர்கள் மற்றும் தமக்கு வேண்டியவர்களுக்கான வேலைவாய்ப்புகள் மற்றும் இடமாற்றங்களையும் சிங்கள மற்றும் முஸ்லிம் அமைச்சர்களை பின்கதவால் அணுகி பெற்றுக் கொள்கிறார்கள். பொது மக்களின் தேவைகள் பற்றிய விடயங்களில் மட்டும் எதுவும் செய்யாமல் இருப்பதற்கு தமது "உரிமைக்குரல்" போர்வையைப் போர்த்திக் கொள்கின்றனர்.

இவ்வாறான பொய் ஏமாற்று மோசடிகளை தமிழ் மக்கள் இனியும் பொறுத்துக் கொள்வார்களானால், இந்த வேடதாரிகளின் வீர வசனங்களையும் போலி வாக்குறுதிகளையும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் நம்புவார்களானால், தமிழ் மக்கள் அரசியல் பொருளாதார ரீதியில் இரண்டாம் தர பிரஜைகளாக அல்ல, நிரந்தரமாக மூன்றாம் தர பிரஜைகளாகவே வாழ வேண்டி ஏற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாமைளந்த அக்டோபர் புரட்சி

திருநாவுக்கரசு சிறிதரன்

அக்டோபார் புரட்சி 100 ஆண்டுகள் கடந்தும் மானிட அறத்தை உலகளாவிய அளவில் உரைத்துக்கொண்டிருக்கிறது. வறுமை சுரண்டல் ஆக்கிரமிப்பு தேசிய நிறவாதம், மதவாதம், சாதிவாதம் மற்றும் பெண் ஒடுக்குமுறை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற - அடிமை விலங்குகளை தகர்ப்பதற்கான கலங்கரை விளக்கமாக அது இன்றுவ வரையும் திகழ்கிறது.

பாரதியின் வார்த்தைகளில் அது ஆஹா என்றெழுந்த யுகப்புரட்சி. அக்டோபர் புரட்சியின் 70 ஆண்டுகளில் 1990 இல் அதன் தாயகம் சோவியத் யூனியனில் அது சிதைவுறச் செய்யப்பட்டது.

ஆனால், உலகளாவிய அளவில் அது ஆதர்சமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. 5 கண்டங்களையும் அது உலுப்பியது. தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் என வெகுஜனங்கள் செங்கொடிகளுடன் உலக வீதிகளில் தலைமுறை தலைமுறையாக எழுந்தார்கள். இந்த மாபெரும் நிகழ்ச்சிப் போக்கு தொடர்கிறது.

போராட்டம், தியாகம், சுதந்திரம், சமத்துவம் என உலகம் பொங்கிப் பிரவாகித்தது. மனித குல விரோத சக்திகளை அக்டோபர் புரட்சி அதன் பாதையில் திட்டவட்டமாக தோற்கடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

மூன்றாம் உலக நாடுகளில் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக அது கரிசனையுடன் உதவியது. உலக சமாதானத்தை அது இடையறாது வலியுறுத்தியது.

இந்தியா, சீனா, வியட்நாம், கியுபா, தென்னாபிரிக்கா என 5 கண்டங்களிலும் அது மானிட விடுதலை என்னும் இலட்சிய வேட்கையை வலுப்பெறச் செய்தது.

கடந்த நூற்றாண்டின் மிகப்பெரும் மானிட அவலமான ஹிட்லர், முசோலினி, பிராங்கோவின் பாசிசத்திற்கும், யப்பானிய இராணுவ வாதத்திற்கும் முடிவு கட்டியதுடன் புவிக்கோளத்தின் அடிப்பாகத்தில் மனிதனை மனிதன் சுரண்டும் அவக்கேட்டிற்கு முடிவு கட்டுவதற்கும், காலனிகளின் விடுதலைக்கும் அது உந்துசக்தியாக இருந்தது.

இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைவர்களை அது பெரிதும் ஈர்த்திருந்தது. காந்தி, நேரு, ஜோசி போன்ற மாபெரும் ஆளுமைகள் அதனால் ஈர்க்கப்பட்டார்கள் இலங்கையின் சுதந்திர இயக்கத்தின் முன்னோடிகளும் அக்டோபர் புரட்சியின் அலைகளில் உருவானவர்களே

இன்று உலக அளவிலும்சரி இலங்கையிலும்சரி நிகழ்ந்த சமூக சீர்திருத்தங்கள் தொழிற்சங்க உரிமைகள் வறிய மக்களுக்கான கொஞ்ச நஞ்ச பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான உந்துவிசையாக இருந்தது. அக்டோபர் புரட்சியே

இலங்கையில் நடந்த சமூக சமத்துவத்திற்கான கிளர்ச்சிகள் எழுச்சிகள் தேசிய விடுதலைப்போராட்டம் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டம் பெண்விடுதலை இயக்கங்கள் இவற்றிற்கெல்லாம் அது ஆதர்சமாக இருந்தது.

1990 இல் சோவியத் யூனியன் ஏகாதிபத்திய சதியால் சிதைக்கப்பட்டது. வரலாற்றின் இயக்கப் போக்கு தடுத்து நிறுத்தப்பட்டது. சரித்திரத்தின் முடிவு என்று ஏகாதிபத்திய சித்தாந்திகள் எக்காளமிட்டார்கள். ஆனால், உலகம் அவர்களின் சாவுமணி அடிக்கும் முனைப்பை தகர்த்தெறிந்து உலகளாவிய அளவில் பேரெழுச்சியாக மாறியிருக்கிறது.

சோவியத் மக்களின் அர்ப்பணம், தியாகம் காட்டிய திசையிலேயே உலகம் இன்று மடை திறந்த வெள்ளம்போல் பிரவாகித்துக்கொண்டிருக்கிறது. உலகளாவிய மானிட விரோத சக்திகள் தற்காலிக வெற்றிபெற்றிருப்பினும் இறுதி வெற்றி மனித குலத்திற்கே என்று மீண்டும் மீண்டும் நிரூப்பணமாகிக்கொண்டிருக்கிறது.

சுரண்டலற்ற உலகிற்காகவும், ஏகாதிபத்திய நவ தாராளவாத உலகில் நாசமாக்கப்பட்ட இந்தப் புவிக் கோளில் மானிடத்தின் வாழ்வு மற்றும் இயற்கை சூழலை பாதுகாப்பதற்காகவும்.

போரற்ற உலகிற்காகவும் பேரியக்கங்கள் ஓயாத அலையாக உருவாகி எழுந்துகொண்டிருக்கின்றன.

புதியதோர் உலகம் செய்வோம் போரிடும் உலகினை வேருடன் சாய்ப்போம். எமதும் எதிர்காலத் தலைமுறைக்கும் பாதுகாப்பான உலகம் ஒன்றை உருவாக்குவோம்!

அக்டோபர் புரட்சியின் தார்மீக வலுக்களை பாதுகாப்போம்!

# 100 கோடி டாலர்களுக்கு மேல் சொத்து மகா கோடீஸ்வரர்கள் பட்டியலில்

## சீனா 2 வது இடம் - இந்தியா 4 வது இடம்

உலக மகா கோடீஸ்வரர்களின் புதிய பட்டியலை போர்ப்ஸ் (FORBES) பத்திரிகை வெளியிட்டுள்ளது. போர்ஃப்ஸ் வெளியிட்ட பட்டியலில் அதிக மகா கோடீஸ்வரர்கள் கொண்ட நாடுகளில், அமெரிக்கா 565 மகா கோடீஸ்வரர்களைக் கொண்டு தொடர்ந்து முதலிடத்திலும், சீனா 319 மகா கோடீஸ்வரர்களைக் கொண்டதாக இரண்டாவது இடத்திலும், 114 மகா கோடீஸ்வரர்களைக் கொண்டதாக ஜேர்மனி மூன்றாவது இடத்திலும் இந்தியா 4-வது இடத்திலும் உள்ளன.

போர்ப்ஸ் வெளியிட்ட புதிய பணக்காரர்கள் பட்டியலில் இந்தியாவில் 101 கோடீஸ்வரர்கள் உள்ளனர். முதல் முறையாக இந்தியாவில் 100க்கும் மேற்பட்ட தனி நபர்கள் உலகப் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் உள்ளனர். இப்பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள இந்திய மகா கோடீஸ்வரர்களில் முகேஷ் அம்பானி முதல் இடத்தில் உள்ளார்.

'உலக மகா கோடீஸ்வரர்கள்' தொடர்பான 2017ம் ஆண்டுக்கான 2,043 நபர்களின் பெயரை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

மேலும் போர்ப்ஸ் வெளியிட்ட உலக மகா கோடீஸ்வரர்கள் பட்டியலில், இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாடு வாழ் இந்தியர்களான இந்துஜா சகோதரர்கள் 64வது இடத்திலும் (சொத்து மதிப்பு 15.4 பில்லியன் டாலர்), இந்தியாவில் பிறந்த வெளிநாடு வாழ் தொழிலதிபரான பல்லோன்ஜி மிஸ்திரி 77வது இடத்திலும் (சொத்து மதிப்பு 14.3 பில்லியன் டாலர்) உள்ளனர்.

இண்டோரமா துணை நிறுவனர் ஸ்ரீ பிரகாஷ் லோகியா 288 வது இடத்தில் உள்ளார் (இவரின் சொத்து மதிப்பு 5.4 பில்லியன் டாலர் )



இந்தப் பட்டியலில் இந்திய பெரும் பணக்காரர் முகேஷ் அம்பானிக்கு 33-வது இடம் (சொத்து மதிப்பு 23.2 பில்லியன் டாலர்) கிடைத்துள்ளது. அவரது சகோதரர் அனில் அம்பானி 745-வது (சொத்து மதிப்பு 2.7 பில்லியன் டாலர்) இடத்தில் உள்ளார். இந்தப் பட்டியலில் ஸ்டீல் குழும தலைவர் லட்சுமி மிட்டல் 56-வது இடத்தில் உள்ளார்.

### மகா கோடீஸ்வரர்களாக இந்திய பெண்கள்

போர்ப்ஸ் வெளியிட்ட மகா கோட்டீஸ்வரர்கள் பட்டியலில் நான்கு இந்திய பெண்கள் இடம் பெற்றுள்ளனர். ஓ.பி. ஜிண்டால் நிறுவனத் தலைவர் சாவித்ரி ஜிண்டால் 303-வது இடத்தில் உள்ளார் இவரின் சொத்து மதிப்பு 5.2 பில்லியன் டாலர் ஆகும். இவருக்கு அடுத்து கோத்ரெஜ் நிறுவனத்தின் ஸ்மிதா கிரிஸ்னா 814-வது இடத்திலும், பயோகான் நிறுவனர் கிரண் மஜும்தார் 973-வது இடத்திலும், யுஎஸ்வி நிறுவனத்தின் தலைவர் லீனா திவாரி 1030-வது இடத்திலும் உள்ளனர்.

இந்தப்பட்டியலில் விப்ரோ நிறுவனத்தின் தலைவர் அசிம் பிரேம்ஜி, அதானி குழும நிறுவனர் கவுதம் அதானி, பேடைம் நிறுவனர் விஜய் சேகர் சர்மா ஆகியோரும் உலக மகா கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். பேடைம் இப்பட்டியலில் இடம்பெற்றிருப்பது குறித்து போர்ப்ஸ் பத்திரிகை தரப்பில் "இந்திய அரசு பணமதிப்பு நீக்கத்தை அமல்படுத்தியபோது பேடைம் நிறுவனம் மிகப்பெரிய அளவில் பலனடைந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளது.

### பட்டியலிலுள்ள முதல் 3 நபர்கள்

போர்ப்ஸின் உலக மகா கோடீஸ்வரர்கள் பட்டியலில், மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் தொடர்ந்து 4வது முறையாக முதலிடத்தில் உள்ளார். கடந்த 23 ஆண்டுகளில் 18 ஆண்டுகளாக உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் பில்கேட்ஸ் முதலிடத்தில் உள்ளார்.

பில்கேட்ஸ்ஸின் சொத்து மதிப்பு 86 பில்லியன் டாலர். கடந்த ஆண்டில் பில்கேட்ஸின் சொத்து மதிப்பு 75 பில்லியன் டாலராக இருந்தது.

பில்கேட்ஸ/க்கு அடுத்ததாக 2-வது இடத்தில் பிரிக்கீர் 'ரத்வே நிறுவனர் வாரன் பஃபே இருக்கிறார் இவரின் சொத்து மதிப்பு 75.6 பில்லியன் டாலர் ஆகும்.

மூன்றாவது இடத்தில், அமேசான் நிறுவனத்தின் தலைவர் ஜெஃப் பெசாஸ் உள்ளார். இவரின் சொத்து மதிப்பு 72.8 பில்லியன் டாலர்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இந்தப் பட்டியலில் 544வது இடத்தில் உள்ளார். அவரின் சொத்து மதிப்பு 3.5 பில்லியன் டாலர் ஆகும். ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க் முதல் முறையாக 5-வது இடத்தை பிடித்துள்ளார். அவரின் சொத்து மதிப்பு கடந்த 12 மாதங்களில் 11.4 பில்லியன் டாலர் அதிகரித்துள்ளது.

- நன்றி தமிழ் இந்து -

தி. சிறிதரன் 294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், [illegible] யாழ்ப்பாணம் மணி பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org